NEW
TRINCO STATIONERS
இலவச ரிசீவர் –
பதிவு செய்யும் திறனுடன்
1, 3, 6, 12
மாதங்களுக்கான சன் டிரக்ட்
மேலும் அனைத்து வகையான
செய்மதி தொலைக்காட்சி சேவைகளும்


026 2223071, 077 7697184

அறைவு 01 இயம் 51 July 13 -19, 2013

# மலைமுரசு
MALAIMURASU
வார இதழ்

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 25.00 Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் – 16 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் பத்திரிகை

# ஐந்து மாணவர் படுகொலை சந்தேக நபர்கள் கைது

உலகையே உலுப்பிய ஐந்து மாணவர்கள் படுகொலையின் சந்தேக நபர்கள் என இனங்காணப்பட்ட பன்னிரண்டு விசேட அதிரடிப்படையினர் கைதாகியுள்ளனர்.

திருகோணமலைக் கடற்கரையில் வைத்து 2006ம் ஆண்டு ஜனவரி மாதம் 02ம் திகதி ஐந்து மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தனர்.

அவ்விடத்தில் விடுலைப் புலிகளால் எறியப்பட்ட கைக்குண்டொன்று வெடித்ததைத்



ரஜிகர் ஹொகாந் சிவானந்தா சஜேந்திரன் கேமச்சந்ரன்

தொடர்ந்து நடைபெற்ற துப்பாக்கிச் சமரில் அவர்கள் ஐவரும் இடைநடுவில் மாட்டிக் கொண்டதால் கொல்லப்பட்டதாக ஆரப்பக்கட்ட அறிக்கைகளை அரச செய்தி ஊடகங்கள் விடுத்திருந்தன.

எனினும் இக் கொலைகள் நடைபெற்றவுடனேயே சர்வதேச சமூகமும், தமிழர் அமைப்புக்களும், கொல்லப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களும் இக் கொலையானது திட்டமிட்ட சதியே என்றும் அதற்கு அக்காலப்பகுதியில் திருகோணமலை நகரில் பிரசன்னமாகியிருந்த.... 11

## என்னைப் பலிவாங்கவே கிழக்கில் போட்டியிட்டனர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் – சந்திரகாந்தன்–

மட்டக்களப்பு மண்முனை மேற்கு கல்வி வலயத்தின் கரடியனாறு மகாவித்தியாலயத்தின் மாணவி அகில இலங்கைத் தமிழ்த் தினப் போட்டிகளில் இரண்டாம் இடத்தைப் பெற்றமையைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அப் பாடசாலையின் அதிபர் திரு செந்தில் நாதன் தலைமையில் நடைபெற்ற போது பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய சனாதிபதி ஆலோசகரும், கிழக்கு மாகாணசபை அங்கத்தவருமான முன்னால் முதலமைச்சர் திரு சந்திரகாந்தன் மேற்சொன்ன கருத்துக்களை முன்வைத்துள்ளார்.



## வயதடையாப் பெண்ணுடன் பாலியல் உறவு - வாலிபருக்கு விளக்கமறியல்

குமரக்கடவை வாலிபர் ஒருவர் 16 வயதனான சிறுமையை புணர்ந்தது வன்புணர்வு எனத் தெரிவித்து திருமலை மாவட்ட பதில நீதிவான் திருச்செந்தில்நாதன் அவர்கள் இளைஞனை விள்க்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். 11

## மட்டு வின்செண்ட மகளிர் பாடசாலையில் "மதர் ஸ்ரீலங்கா"

பாடசாலை மட்டத்தில் இன ஐக்கியத்தை ஏற்படுத்தும் நிகழ்வொன்றான "மதர் ஸ்ரீலங்கா" நிகழ்வு மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் தேசிய பாடசாலையில் நடந்தேறியுள்ளது. 11

## விபத்தில் சிக்கி சமுர்த்தி முகாமையாளர் மூவர் உயிரிழப்பு

மன்னம்பிட்டியில் சமுர்த்தி அலுவலர்களுடன் பயணித்த சொகுசுப் பேரூந்து அதிகாலை வேளையில் விபத்துக்குள்ளானதில் மூன்று சமுர்த்தி முகாமையாளர்கள் சம்பவ இடத்தில் பலியாகியுள்ளனர்.

இக் கோர விபத்து 12ம் திகதி அதிகாலை மூன்று மணியளவில் நிகழ்ந்துள்ளது.

கொழும்பில் நடந்த கூட்டமொன்றை முடித்துக் கொண்டு இரவோடிரவாகப் பயணித்த இருபத்தொரு சமுர்த்தி முகாமையாளர்களும் கருத்திட்ட அலுவலர்களும் பயணித்த இடைத்தர சொகுசுவண்டியே விபத்தடைந்துள்ளது.

இவ்விபத்து மருதமரத்தடிப பகுதியில் உள்ள மரம் ஒன்றுடன் மோதி ஏற்பட்டுள்ளது. பேரூந்தின் வேகத்தைக் கட்டுப்படுத்த சாரதியால் முடியாது போகவே கட்டுப்பாட்டை இழந்த பேரூந்து மரத்துடன் மோதியதாக ஆரம்பக்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் சாரதி அவ் அதிகாலை வேளையில் கண்ணயர்ந்தாரா என்பது பற்றி மேலதிக விசாரணைகளின் பின்னரே தெரிய வரும. இவ்விபத்தில் சுந்தரம் உதயகுமார் - (கல்லாறு), வேலுப்பிள்ளை ஜீவரெத்தினம் (வாழைச்சேனை, புதுக்குடியிருப்பு), பேரின்பம் சபேசன் (ஆரையம்பதி) ஆகியோரே பலியாகியுள்ளனர்.

மேலும் இவர்களுடன் பயணித்த இருபத்தியொரு அலுவலர்கள் படுகாயமடைந்து பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். அவர்களில் இருவர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

காலை 11 மணியளவில் அதி (2ம் பக்கம்)

## 13 ஐத் திருத்த ஆதரவில்லை – கல்முனை நகரசபை தீர்மானம்

13 ஆவது திருத்தச் சட்டத்தில் எவ்வித மாற்றங்களும் இடம் பெறக்கூடாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கட்டுப்பாட்டிலுள்ள கல்முனை மாநகர சபையில் தீர்மானமொன்று நிறைவேற்றப் பட்டுள்ளது. பெரும்பான்மைப பலத்துடன் நிறைவேற்றப்பட்ட இத் தீர்மானத்திற்கு எதிராக வாக்கு ஒன்று மட்டுமே அளிக்கப்பட்டிருந்தது.

கல்முனை மாநகர சபையின் அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன்போது மேயர் சிராஸ் மீராசாஹிபினால் பிரேரணையொன்று சமர்ப்பிக்கப்பட்டது. 13ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தில் மாற்றங்களை கொண்டுவருவதற்காக எடுக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் இந்த பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பிரேரனை மீதான விவாதத்தின் பின்னர் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது.

இதன்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் மாநகர சபை உறுப்பினர் மாத்திரம் எதிர்த்து வாக்களித்தார்.

ஏனைய அனைத்து மாநகர சபை உறுப்பினர்களும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இந்த பிரேரணை நிறைவேற்றம் தொடர்பில் சனாதிபதிக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என மேயர் தெரிவித்தார்.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப் படுத்தும் மற்றைய மாநகர சபை உறுப்பினரான றகுமான், இந்த வாக்கெடுப்பில் கலந்துகொள்ள வில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

மலைமுரசு MALAIMURASU பத்திரிகையில் பணியாற்ற வடிவமைப்பாளர் தேவை.
உடனே தொடர்புகொள்ளவும்.
0777555738
Photoshop, Pagemaker
தெரிந்திருத்தல் நன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசு
MALAIMURASU
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042


## வணக்கம்

### தெய்வம் நின்றறுக்கின்றதா?

அரசன் அன்று அறுப்பான் - தெய்வமோ நின்று அறுக்கும் என்று பழமொழி ஒன்று எம்மிடையே சொல்வழக்கில் உள்ளது.

அதன் அர்த்தம் பற்றிச் சொல்லத் தேவையில்லை. ஆனால் அவ் அர்த்தப்படி கொலைகளுக்கான தண்டனைகள் கிடைத்துக்கொண்டு தான் இருக்கின்றன.

இலங்கையின் காவல்துறையின் மிக மூத்த அலுவலனும், அடுத்த காவல்துறை மா அதிபராக வரவேண்டியவனுமான குற்றவாளிச் சந்தேக நபர் இன்று கைதாகிக் கூண்டுக்குள் கிடக்கின்றான்.

கைதாகிய பின் அவன் சார்பில் புரியப்பட்ட குற்றங்கள் ஒவ்வொன்றாக உறை நிலையிலிருந்து வெளி வரத் தொடங்கியுள்ளன. தெய்வம் மனிதர்களின் வாயிலாகப் பேசத் தொடங்கியிருக்கின்றது.

அடுத்து திருமலைக் கடற்கரையில் கொல்லப்பட்ட, அப்பாவி இளைஞர்களான ஐந்து மாணவர்களின் படுகொலைகளில் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் பன்னிருவர் கைதாகியுள்ளனர்.

ஏழு வருடங்களுக்கு முன் அவர்கள் புலிகள் என்றும், குண்டு வீசியவர்கள் என்றும், துப்பாக்கிச் சமரின் இடை நடுவில் மாட்டிக் கொண்டவர்கள் என்றும் தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காகக் கொல்லப் பட்டவர்களின் நீதியை மறைக்க முயன்ற யாவும் இன்று மௌனித்துப் போய்விட்டது.

அவ் ஐந்து கொலைகளுக்கான நியாயம் எப்போது கிடைக்கும் என்று தெரியவில்லை. ஆனால் கிடைக்கும்.

இவ் விரண்டு விடயங்களும் எமக்கு வெளிப்படையாகச் சொல்வது மேற்சொன்ன பழமொழியைத் தானே.

ஆனால் சொல்லாத சேதியொன்று புதைந்து கிடக்கின்றது அங்கு......

கொலைகள் மண்ணுட் புதையுண்டு ஆண்டுகள் ஆன பின்னும் அம் மண்ணிலிருந்து குரல்கள் பேசத் தொடங்கும். மண்ணுள்ளிருந்து பேசும் குரல்களை மறைப்பதற்கு வானம் மண்ணை மூடினால் தவிர வேறு எவையும் அவற்றின் குரல்களைத் தடுக்க முடியாது.

அவை பேசும் காலத்தில் பல உண்மைகள் வெளிவரும். கொல்லப்பட்டவர்களின் நியாயம் கொலை செய்தவர்களைக் குற்றவாளியாக்கும். தண்டனைகள் காத்துக் கிடக்கும்.

இங்கு எனக்கெழும் கேள்வியெல்லாம்...... அரசன் அன்று அறுப்பான் - தெய்வம் நின்று அறுக்கும் என்பது சரி ஆனால் அரசனின் அறுப்புக்களை தெய்வம் நின்று அறுக்குமா?

அல்லது அரசன் அறுப்பதற்காகத்தான் இந்த ஊழிக்காலத்தில் படைக்கப்பட்டுள்ளானா?

பகவத்கீதையில் கடவுள் சொல்கிறார் "நீ எதைச் செய்தாலும் அதை எனக்காகத் தான் செய்கின்றாய் என்று எண்ணுவாயாகில் அச் செயலின் நன்மையும் தீமையும் உனைச் சாராது" என்று..... அரசன் எமைக் கொலை செய்த போது அப்படி நினைத்திருந்தால்......

## சம்மாந்துறை வைத்தியசாலையில் தன்னியக்க அறுவைத் தையல் எந்திர சிகிச்சை வெற்றி

கிழக்கு மாகாணத்தில் முதல் தடவையாக சம்மாந்துறை அன்வர் இஸ்மாயில் ஞாபகார்த்த வைத்தியசாலையில் தன்னியக்க ஸ்டெப்ளர் இயந்திரம் பயன்படுத்தப்பட்டு நோயாளி ஒருவருக்கு செய்யப்பட்ட சத்திர சிகிச்சை பூரண வெற்றியளித்துள்ளதாக மருதமுனை கிராமத்தை சேர்ந்த சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ஏ.டபிள்யு.எம்.சமீம் தெரிவித்தார்.



சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ஏ.டபிள்யு.எம்.சமீம் மேலும் தெரிவிக்கையில்...

இவ்வாறான சத்திர சிகிச்சை கிழக்கு

11

## கிண்ணியா - தம்பலகாமம் கம்பள வீதிப் பணிகள் ஆரம்பம்

கிண்ணியா - தம்பலகாமம் வீதி விஸ்தரிப்பு வேலைத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் தேசிய அபிவிருத்தி கருத்தாக்கத் திட்டத்தின் கீழ் கம்பள வீதியாக கிண்ணியா தம்பலாகமம் வீதி விஸ்தரிக்கப்படவுள்ளது.

இதன் நிர்மாணத்திற்காக சவூதி அரேபியா அரசாங்கம் நிதி



தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் திட்ட அமைச்சர் நிர்மல கொத்தலாவல, கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜிப் அப்துல் மஜீத் ஆகியோர் கலந்துகொண்டனர். மகிந்த சிந்தனை வழங்கியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் தெரிவித்தார். கிண்ணியா, தம்பலாகமம் மற்றும் முள்ளிப்பொத்தானை பிரதேச மக்களின் நீண்ட கால எதிர்பார்ப்பாக இந்த வீதி காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சிவில் பாதுகாப்பு குழுகளுக்கு இடையிலான விசேட கலந்துரையாடல்

திருகோணமலை உப்புவெளி காவல்துறை பிரிவுக்கு உட்பட்ட சிவில் பாதுகாப்பு குழுக்களுக்கு இடையிலான விசேட கலந்துரையாடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. திருகோணமலை, அலஸ்தோட்டம் மாதுமை அம்பாள் வித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மற்றும் உப்புவெளி காவல் நிலைய பதில் பொறுப்பதிகாரி உட்பட பலர் கலந்துகொண்டனர். இந்த கலந்துரையாடலில் மக்களுடைய பிரச்சினைகள் மற்றும் அபிப்பிராயங்கள் கேட்டறியப்பட்டதுடன் மேலும் குற்றச்செயல்கள் குறித்த தகவல்களை மக்கள் காவல்துறைக்கு தெரிவிக்குமிடத்து தகுந்த தீர்வுகள் மேற்கொள்ளப்படும் எனவும் உறுதிமொழி வழங்கப்பட்டது.

## விபத்தில் சிக்கி...

தீவிர சிகிச்சைப் பிரிவிலிருந்த மற்றோர் பெண் உத்தியோகத்தரும் மரணித்துவிட்டதாகத் தெரிகின்றது.

வாழைச்சேனையைச் சேர்ந்த திருமதி மேனகா பாஸ்கரன் என்பவரே சாவடைந்த பெண் முகாமையாளர் ஆவார். இவர் வாகரைப் பிரதேசச் செயலர் பிரிவின் சமுர்த்தி முகாமையாளர் ஆவார்.

அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த மற்றைய அலுவலரான திரு. வாமதேவன் மேலதிகச் சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்கு அனுப்பப் பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர்களுள் சொகசப் பேருந்தின் ஓட்டியும் அடங்குவதாகத் தெரிகின்றது.

இருவர் மட்டுமே எதுவித தீங்குமின்றித் தப்பியுள்ளனர்.

## தரங்குறைந்த பெற்றோலே 2011ம் ஆண்டிலிருந்து கொள்வனவு...?

இரண்டு வாரங்களுக்கு முன் தரங்குறைந்த மசகு எண்ணையை இலங்கைக்கு அனுப்பி வைத்த ஐக்கிய அரபுக் குடியரசின் கம்பனியொன்றை இலங்கை வழங்குனர் பட்டியலில் இருந்து கறுப்புப் புள்ளியிட்டு நீக்கியுள்ளது.

இதனைத் தெரிந்த கொண்ட அக்கம்பன் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது கடந்த 2011ம் ஆண்டிலிருந்தே தரங்குறைந்த மசகு எண்ணையைத்தான் இறக்குமதி செய்து வருகின்றது எனக் குற்றஞ் சாட்டியுள்ளது.

இத் தகவல் உண்மையாயின் நாடெங்கிலும் உள்ள பெற்றோலிய நிலையங்கள் ஊடாகத் தரங்கெட்ட எரிபொருளையே மக்கள் பாவித்திருப்பர் என தெரியவருகின்றது.

எமிரேட்ஸ் நசனல் ஒயில் கம்பனி எனப் பெயரிடப்பட்ட கம்பனியானது இரு வாரங்களுக்கு முன் 40,000 தொன் டீசலைக் கப்பல் மூலம் இலங்கைக்கு அனுப்பியிருந்தது.

இக்கம்பனியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட டீசல் இலங்கையின் நியமங்களுக்கு ஒத்திருக்காததால் அக் கப்பல் திருப்பியனுப்பப் பட்டதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சர் பிரயதர்சன யாப்பா தெரிவித்திருந்தார். அத்துடன் இக் கம்பனியுடன் இனிவருங் காலங்களில் கூட்டுத்தாபனம் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளாது என்றும் தெரிவித்திருந்தார்.

அக்கம்பனியானது கூட்டுத்தாபனம் முன்னரும் பலமுறை தரமற்ற டீசலைக் கொள்வனவு செய்துள்ளது என குற்றஞ்சாட்டியிருப்பதுடன் 2011ம் ஆண்டில் பல வாகனங்கள் பழுதடைந்து தெருவில் நிற்கக் காரணமான டீசலையும் கூட்டுத்தபனமே கொள்வனவு செய்தது என்றும் கூறியுள்ளது.

பாதுகாப்பு இருப்பையும் தாண்டி பெற்றோலிய இருப்புக்கள் குறைவடையத் தொடங்கியதை அடுத்து தனது கம்பனியிடம் கூட்டுத்தாபனம் பெற்றோலிய வழங்கலைச் செய்யுமாறு 2011ல் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே தாம் இன்றுவரை பெற்றோலியப் பொருட்களை இலங்கைக்கு ஏற்றுமதி செய்வதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. தம்மிடம் போதுமான அளவு தரமுள்ள பெற்றோலிய இருப்புக்கள் இல்லை எனக் கூறிய போது இருக்கின்ற பெற்றோலியத்தை அனுப்பிவைக்குமாறு பெற்றோலிக் கூட்டுத்தாபனம் அவ் வேளையில் கேட்டுக்கொண்டது என்றும் அக்கம்பனி கடும் குற்றச்சாட்டை முன்வைத்தள்ளது.

பழுதடைந்த சுமார் 4000 வாகனங்களுக்கு நட்டஈட்டை கூட்டுத்தாபனம் வழங்கியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டு வாவியில் டிஸ்கோ வலைகள் பறிமுதல்

மட்டக்களப்பு வாவியில் மீன் பிடிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட 18 டிஸ்கோ வலைகளை மாவட்ட கடற்றொழில் திணைக்கள பரிசோதகர்கள் நேற்றிரவு(8) கைப்பற்றியுள்ளனர்.

5 இலட்சத்து 20 ஆயிரம் ‘ரூபாய் பெறுமதியான 18 டிஸ்கோ வலைகளையே இவ்வாறு கைப்பற்றியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வழங்கல் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் டொமிங்கோ ஜோர்ஜ் தெரிவித்தார். சட்டவிரோத வலைகளை கைப்பற்றும் நடவடிக்கை நேற்று மாலை 6.00 மணிமுதல் இன்றுக்காலை 6.00 மணிவரை காத்தான்குடி, ஆரையம்பதி, மண்முனை , மாவிலங்குதுறை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டதாக திணைக்களத்தின் மாவட்ட பரிசோதகர் ஜே. ஏ. ராஜ்குமார் தெரிவித்தார்.

இந்நிலையில் சட்டவிரோத வலைகளை வைத்திருந்ததாக கூறப்படும் மாவிலங்குதுறை கிங்ஸ்லி மகேந்திரன் வயது (52) கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

வாவி மீன்பிடியில் ஈடுபட்டுள்ள 11,439 குடும்பங்களின் தலைவர்களுக்கு வாவியில் மீன்வளம் அழிவது பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தியும் அவர்கள் சட்டவிரோத மீன்பிடியில் ஆர்வம் காட்டுவது கவலையளிக்கின்றது என்று பரிசோதகர் ஜே. ஏ. ராஜ்குமார் தெரிவித்தார். கைப்பற்றப்பட்ட வலைகளை மட்டக்களப்பு நீதிமன்றில் இன்று சமர்ப்பிக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்

அதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த ஆண்டில் 2,789,000 ‘ரூபா பெறுமதியான சட்டவிரோத மீன்பிடி வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் கைப்பற்றப்பட்டதாக கடற்றொழில் திணைக்களத்தின் மாவட்ட உதவி பணிப்பாளர் டொமினிக் ஜோர்ஜ் தெரிவித்தார்

## அம்பாறைக்கு மேலதிக அரச அதிபராக திரு விமலநாதன்

அம்பாறை மாவட்ட மாவட்ட செயலகத்தின் மேலதிக அரசாங்க அதிபராக கிழக்கு பிராந்திய பிரதி தபால் மா அதிபராக கடந்த பெப்ரவரி மாதம் தொடக்கம் கடமையாற்றிய வந்த மட்டக்களப்பை சேர்ந்த கே.விமலநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்

08.07.2013அன்று மாவட்ட செயலகத்தில் தனது கடமையினை இவர் பொறுப்பேற்றுக்கொண்டதாக அம்பாறை மாவட்ட செயலகம் தெரிவித்தது.

பிரதித் தபால் மா அதிபர் பதவிக்கு முன்னதாக மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மூன்று வருடங்களாக மேலதிக அரசாங்க அதிபராக திரு.கே. விமலநாதன் கடமையாற்றியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## வலையிறவு பாலம் பொதுமக்கள் பாவனைக்கு

வவுணதீவையும் மட்டக்களப்பையும் இணைக்கும் புராதனப் போக்குவரத்துப் பாலமான வலையிறவுப் பாலம் 1990ம் ஆண்டின் பின் முதன் முதலாக மக்களின் பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளது. 1990ம் ஆண்டில் குண்டுத் தாக்குதலால் முற்றாக இப்பாலம் சேதமடைந்ததைத் தொடர்ந்து 23 வருடங்களின் பின் இப் பாலம் மீளப் புனரமைக்கப்பட்டுள்ளது.

மழைகாலங்களில் மக்கள் இவ்விடத்தில் படகுப் பணயங்களையே மேற்கொண்டிருந்தனர். தற்போது திருத்தப்பட்டுள்ள பாலத்தால் வவுணதீவுப் பிரதேசப் போக்குவரத்து இலகுபடுத்தப்பட்டுள்ளது.



## நட்சத்திரா மகளிர் அமைப்பின் விருது வழங்கும் விழா

மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனை தேவபுரம் நட்சத்திரா மகளிர் அமைப்பின் ஏற்பாட்டில் நுண்ணறிவு மற்றும் கலாசார பண்பாட்டை மேம்படுத்துதல் தொடர்பான போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பாராட்டு விழா நேற்று செவ்வாய்க்கிழமை எல்.ஓ.எம் சமூக மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சிறிகிருஸ்ணராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டதுடன் கோறளைப் பற்று கோட்டக் கல்வி அதிகாரி ந.குணலிங்கம், எல்.ஓ.எம் நிறுவன முகாமையாளர் எல்.ஆர்.டேவிட், திட்ட முகாமையாளர் வண ஏ.சௌந்தரராஜன், சிறுவர் நன்னடத்தை உத்தியோகஸ்தர் ஆர்.பற்குணநாதன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## மட்-தேசிய கல்வியியற் கல்லூரியில் பராக்கிரமபாகு



மட்டு-தேசிய கல்வியியற் கல்லூரியில் பராக்கிரமபாகுவின் சிலையொன்றை கல்வி கற்கும் ஆசிரிய மாணவர்கள் வடித்தெடுத்து நிறுவியுள்ளனர்.

இக் கல்லூரியில் சமூக விஞ்ஞானக் கற்கைப்பிரிவின் ஆசிரியப் பயிலுனர்களே தமது செயற்றிட்டத்தின் கீழ் இச் சிலையை வடிவமைத்துள்ளனர்.

சமூக விஞ்ஞான பீடத்தின் பொறுப்ப விரிவுரையாளரும், கல்லூரியின் உப பீடாதிபதியுமான எம்.சி.ஏ. ஜுனைத் தலைமையில் நடைபெற்ற சிலைத் திறப்பு விழாவில் கல்லூரிப் பீடாதிபதி எஸ். பாக்கியராசா கலந்து சிறப்பித்திருந்தார்.

# மக்கள் முரசு

**பாலையூற்றுப்** பகுதியில் பல மின் கம்பங்கள் சாய்ந்தவாறு உள்ளன. பொதுமக்களால் பல தடவைகள் மின்சார சபைக்கு எடுத்துக் கூறியும் இது வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மக்கள் கவலை கொள்கின்றனர்.

இந்த சரிந்த மின்கம்பங்களினால் எந்த நேரத்திலும் உயிர்ச் சேதங்கள் ஏற்பட வாய்ப்புண்டென மக்கள் அச்சம் கொள்கின்றனர்.

- பாலையூற்றான்-

**திருகோணமலை** உள்ளூராட்சி நிறுவனங்கள் மக்களுக்கு டெங்கு தொடர்பாக அடிக்கடி அறிவுறுத்தல்களை வழங்கினாலும் தங்களுக்குரிய கடப்பாட்டிலிருந்து ஒதுங்கி வருவதாக தெரிகிறது.

மட்டிக்களிப் பகுதியில் கடற்கரை ஓரங்களில் எண்ணற்ற திண்மக்கழிவுப் பொருட்கள் தேங்கிக் கிடப்பதை இன்னமும் குறித்த நிறுவனங்கள் கண்டும் காணாமல் இருப்பதனால் டெங்கு பெருக்கம் மேலும் அதிகரிக்க வாய்ப்புண்டு. மக்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டியவர்கள் தத்தமது கடமைகளையும் சரிவர செய்ய வேண்டுமென நலன் விரும்பிகள் எதிர்பார்க்கின்றனர்.

-மம்பட்டியான்-

## கோட்டமட்டப் போட்டிகளில் தம்பலகாமம் ஆதிகோணேஸ்வரா சாதனை

ஆதிகோணேஸ்வரா மகா வித்தியாலயம், தம்பலகாமம் பாடசாலையானது கோட்ட மட்டத்தில் நடைபெற்ற கணித வினாடி வினாப் போட்டியிலும், விஞ்ஞான வினா விடைப் போட்டியிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளது. விஞ்ஞான பாடத்திற்கான ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளபோதும் மாணவர்கள் இச்சிறந்த பெறுபேற்றை பெற்றமை குறிப்பிடத்தக்கது. அப்பாடசாலை பெற்ற பெறுபேறுகள் வருமாறு

கணித வினாடி வினாப் போட்டி

| | | |
|---|---|---|
| தரம் - 06 : | 1ம் இடம் | - யோ.பிரித்திகா |
| | 3ம் இடம் | - ம.சிந்துஜா |
| தரம் - 07 : | 1ம் இடம் | - இ.மதுஷாளினி |
| தரம் - 08 : | 2ம் இடம் | - த.பிரசாளினி |
| | 3ம் இடம் | - ம.பவனிகா |
| தரம் - 09 : | 1ம் இடம் | - ஜெ.விதுர்சன் |
| தரம் - 10 : | 1ம் இடம் | - க.ஜனனி |
| | 3ம் இடம் | - கு.தனுசியன் |
| தரம் - 11 : | 1ம் இடம் | - க.சமேசிகா |
| | 3ம் இடம் | - து.அபிலாசினி |

விஞ்ஞான வினா விடைப் போட்டி

| | | |
|---|---|---|
| தரம் - 07 : | 2ம் இடம் | - ர.மதுஷாளினி |
| | 3ம் இடம் | - க.காயத்திரி |
| தரம் - 08 : | 1ம் இடம் | - த.பிரசாளினி |
| தரம் - 11 : | 1ம் இடம் | - வி.டிலக்ஷன் |
| | 2ம் இடம் | - து.அபிலாசினி |
| | 3ம் இடம் | - க.சமேசிகா |

தரம் 7யைச் சேர்ந்த கோபகன் கம்சவர்த்தன் அவர்கள் மாகாண மட்ட விஞ்ஞான புத்தாக்கப் போட்டியில் வெற்றி பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இராணுவத்தினருக்குத் தமிழ் கல்வி

22வது படைப்பிரிவின் இராணுவ வீரர்களுக்கான சிங்கள மொழி மூலம் தமிழ் பயிற்சி வகுப்புக்கள் கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி திணைக்களத்தின் ஊடாக திருகோணமலை பிளாண்டன் பொயின்ட் இராணுவ முகாமில் நடாத்தப்பட்டு வருகின்றன.

இவ்வகுப்புக்களை கிழக்கு மாகாண முன்னாள் ஹென்சாட் ஆசிரியர் ஜே.எஸ்.மரியதாஸ் நடாத்துவதை படத்தில் காணலாம். இவ்வாறான வகுப்புக்கள் கடந்த வருடங்களில் திருகோணமலை கடற்படை வீரர்களுக்கு குறித்த ஆசிரியரால் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருமுகம் காட்டும் இலங்கை அரசின் முடிவு... எப்போது?

மாயன்

13வது திருத்தச் சட்டத்தின் திருத்தம் தொடர்பாக இலங்கை அரசு எதிரும் புதிருமான இரு வேறுபட்ட நிலைப்பாடுகளுக்குள் அலைவதைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

முதலாவது நிலைப்பாடாக நேரடியாகப் பாராளுமன்ற வலுவைக் கொண்டு 13வது திருத்தத்திலுள்ள காவல்துறை மற்றும் காணி அதிகாரங்களை நீக்குவதுடன் இரு மாகாணங்கள் தாமாகவே விரும்பி ஒன்றாக இணையும் வாய்ப்பினையும் இல்லாது ஒழித்தல் என்னும் முயற்சியைக் குறிப்பிடலாம்.

அதே வேளை மற்றைய முனையில் தமிழர் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான முன்மொழிவுகளையும் 13வது திருத்தம் தொடர்பாக நடவடிக்கைகள் எடுப்பதற்காகவும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவை தேர்வு செய்து அத் தெரிவுக் குழுவின் அடிப்படையிலேயே நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாகவும் வெளிக் காட்டிக் கொண்டிருப்பதைக் குறிக்கலாம்.

முதலில் தன்னிச்சையாகப் பாராளுமன்றில் 13வது திருத்தத்தில் மாற்றங்களைக் கொண்டுவர அரசு முயற்சித்த போது அதனை ஆளுங் கட்சிக் கூட்டணிக்குள் உள்ள கட்சிகளே எதிர்க்கத் தொடங்கியதால் அம் முயற்சியை தற்காலிகமாகப் பின்தள்ளியுள்ள அரசு தற்போது பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் தனது கவனத்தை செலுத்தத் தொடங்கியுள்ளது.

ஆனால் பாராளுமன்றத் தெரிவுக் குழுவை முக்கிய எதிர்க்கட்சிகளான ஐ.தே.க மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன தவிர்த்துள்ள நிலையில் அதன் அங்கத்தவர்களாக அரசின் பிரதிநிதிகள் மட்டுமே அங்கிருப்பதானது அரசின் முடிவைத் தெரிவிக்கும் ஓர் ஊதுகுழலாகவே அப் பாராளுமன்றத் தெரிவுக் குழு இருப்பதை உணர்த்தி நிற்கின்றது.

எனினும் இப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செல்லவில்லை என்பதை எடுத்து நோக்க வேண்டும்.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை அமைப்பதன் காரணமே பொதுப் பிரச்சனையொன்றை தீர்ப்பதற்கான பரிந்துரைகளைக் கண்டு பிடிப்பதற்காக அனைத்துக் கட்சி அங்கத்தவர்களையும் கொண்ட குழுவொன்றை உருவாக்க நியாயமாக விவாதித்து பரிந்துரைகளை உருவாக்குவதற்கே. இங்கு கவனிக்க வேண்டிய விடயம் யாதெனில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முடிவு இறுதியாகவே தெரியவரும் என்பதே. ஆனால் தற்போது உருவாக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக் குழுவானது ஏற்கனவே அரசினால் மேற்கொள்ளப் பட்டுள்ள முடிவை தமது வாயால் உளறப்போகும் ஊதுகுழலாகச் செயற்படப் போகின்றது என்பதை தெளிவாக சுட்டி நிற்கின்றது.

அடுத்ததாக தமிழர் பிரச்சனைக்கான தீர்வு என எதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்க்கின்றது என்பதும் காரணமாக அமைகின்றது.

த.தே.கூ. வின் எதிர்பார்ப்பு என்ன என்பதை அக் கூட்டமைப்பின் தலைவர் தெளிவாக அண்மைய பேட்டியொன்றில் தெரிவித்து விட்டார். “ஆட்சியுரிமையில் நியாயமான பங்கு தமிழருக்கு வேண்டும்” என்பதே அது. அவ் உரிமையை எப்போதுமே சிங்கள தேசம் தரப்போவதில்லை என்பதை தெளிவாகத் தெரிந்து கொண்டே சம்பந்தர் அக்கருத்தை வெளியிட்டிருந்தார்.

இத் தீர்வுக் கருத்தைக் கொண்டுள்ள த.தே.கூ ஆகக் குறைந்த அதிகாரப் பகிர்வாக இருக்கும் மாகாண சபை முறைமையை மேலும் பலவீனமாக்கும் தெரிவுக்குழுவிற்கு எவ்வாறு செல்ல முடியும்? எனவே தெரிந்த முடிவை அறிவிக்க முயற்சிக்கும் தெரிவுக்குழுவிற்குச் செல்வதற்கு த.தே.கூ ஒரு போதும் உடன்படப்போவதில்லை.

இதனைத் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ள இலங்கை அரசு த.தே.கூ வை தன்வழிப்படுத்த இந்திய உதவியை நாடியுள்ளது. இந்தியாவைக் கொண்டு த.தே.கூ வை பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்குள் உள்வாங்கி அதன் பின் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் பெரும்பான்மையைக் காட்டி 13வது திருத்தத்தில் மாற்றம் செய்ய முயற்சிக்கும் முனைப்பில் இலங்கை தற்போது உள்ளது.

எனினும் இந்தியப் பயணத்தின் போது இந்திய அரசு த.தே.கூட்டமைப்பிற்கு “தமிழர்களைக் கைவிடமாட்டோம்” என்ற வாக்குறுதியொன்றை வழங்கியுள்ளது.

அதற்கேற்ப இந்தியா சென்றிருந்த பசில் இராசபக்சவும் அங்கிருந்து திரும்பிய பின் தாம் முன்னெடுக்கும் 3டி திட்டத்தை இந்தியா ஆதரிக்கின்றது என்று சொன்னாரே தவிர வேறு எவ்விடயம் தொடர்பாகவும் தமது வாயைத் திறக்காமலே உள்ளார். “இரசகியங்களளை நாம் கணவன் மனைவிக்கிடையே பேணுவது போலப் பேணினால்தான் பிரச்சனைகளை சுளுவாகத் தீர்க்க முடியும்” என அவர் ஆங்கிலப் பத்திரிகையொன்றின் கேள்விக்க விடையளித்துள்ளார். இதனால் இந்தியா கடுமையான நிலைப்பாட்டில் உள்ளதா ? என்னும் ஐயம் வலுப்பெற்றுள்ளது.

அவ் எண்ணத்திற்கு வலுச் சேர்க்கும் முகமாக இலங்கை வந்துள்ள சிவ்சங்கர் மேனனைச் சந்தித்துள்ள சனாதிபதி காவல்துறை மற்றும் காணி அதிகாரங்களைப் பகிர்வதில் சிக்கல்கள் உள்ளதாக தெரிவித்துள்ள போதும் இலங்கை அரசு தான் நினைத்தபடி 13வது திருத்தத்தில் கைவைக்க முடியாது என பத்திரிகைகளுக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் சிவ்சங்கர் மேனன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசும் தற்போதுவரை தமிழர் பிரச்சனைக்குத் தீர்வாக காத்திரமான எதனையும் முன்வைக்கவில்லை என்பது வெளிப்படையானது. காலத்திற்குக் காலம் யாதாயினும் ஒரு விடயத்தைக் கையிலெடுப்பதும் அதனை முன்னிலைப்படுத்தி செயற்படுவதுமாகவே உள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவ் ஒரு விடயம் சம்பந்தமாக அரசின் பல்வேறு மட்டங்களில் எதிரும் புதிருமான கருத்துக்கள் வெளிவரத் தொடங்கி அவரவர் தத்தமது விருப்பத்துக்கு ஏற்ப செயற்பாடுகளை முன்னெடுப்பதையும் காண முடிகின்றது.

இவற்றைக் கொண்டு சர்வதேசத்தை ஏமாற்றிவிட துடிக்கும் இலங்கை அரசின் போக்கின் முற்றுப்புள்ளி எங்கே? யாரால் வைக்கப்படப் போகின்றது என்பதை மிக விரைவில் காணமுடியும்.

## ஐக்கிய இராச்சிய நியாயசபைத் தீர்ப்பு...

## மனிதவுரிமை விவகாரத்தில் மீண்டும் கரும் புள்ளி

கடந்த 05ம் திகதி ஐக்கிய இராச்சியத்தின் நியாயசபையொன்று இலங்கையர்க்கான புகலிடக் கோரிக்கையினை ஆராய்ந்து வழங்கிய தீர்ப்பொன்று இலங்கையின் மனித விவகாரங்களின் மீது மீளவோர் கறையை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே இலங்கையின் மனித விவகாரங்கள் போருக்குப் பின்னரான காலப்பகுதியில் முன்னேற்றம் அடைவதற்குப் பதிலாக பின்னேற்றம் அடைந்து வருவதாக உலகலாவிய பரப்பில் இயங்கும் மனித உரிமை அமைப்புக்கள் ஆதாரங்களுடன் குற்றம் சுமத்திவரும் வேளையில் அக்குற்றச் சாட்டுகளுக்கு ஆதாரங்களாகக் கருதப்பட்டவற்றை தடயங்களாக தனது விசாரணைக்கு எடுத்து, அத் தடயங்களை நன்றாக விசாரணை செய்து, தற்போது அத் தடய விசாரணை அடிப்படையில் நியாயசபையானது தனது தீர்ப்பை வெளியிட்டுள்ளது.

அத் தீர்ப்பானது ஆயுதப் படைகளால் கைது செய்யப்படும் இலங்கை தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள காலத்தின் போது கொடுமைகளுக்கும் உயிராபத்துக் களுக்கும் உள்ளாவதை ஏற்றுக் கொண்டுள்ளது.

அத்துடன் அவ்வாறானவர்களை உள்ளூரில் பாதுகாக்க முடியாதிருப்பதுடன் சர்வதேசப் பாதுகாப்பையே அவர்களுக்கு வழங்க வேண்டியுள்ளது என்றும் அந் நியாயசபை ஏற்றுக் கொண்டுள்ளது.

அவ்வாறான இலங்கைத் தமிழர்கள் யாவர் என்றும் அந் நியாயசபை தனது தீர்ப்பில் பட்டியலிட்டுள்ளது.

விடுதலைப் புலிப் போராளிகள், அவர்களின் குடும்பத்தவர்கள், ஊடகவியலாளர்கள், தமிழ் ஆதரவுச் செயற்பாட்டாளர்கள் மற்றும் மனிதவுரிமைச் செயற்பாட்டாளர்களே அவர்கள் எனத் தனது தீர்ப்பில் மேலும்



தெரிவித்துள்ளது.

இலங்கை முழுவதையும் தனது கட்டுப்பாட்டில் இலங்கை வைத்திருப்பதால் இலங்கைக்குள் எங்கும் மேற்கூறப்பட்டவர்களால் பாதுகாப்பாக வாழ முடியாது எனவும், அரசைக் கேள்விக்குள்ளாக்கும் அல்லது விமர்சிக்கும் ஊடகவியலாளர்களும், மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் கூட இவ் வகையான அழுத்தங்களை எதிர்கொள்ள வேண்டியவர்களாக உள்ளனர் எனவும் அவ் ஐக்கிய இராச்சிய நியாயசபை தீர்ப்பளித்துள்ளது.

உலக நாடுகளிற் பெரும்பாலானவை இலங்கையால் நியமனம் செய்யப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் முன்மொழியப்பட்ட விடயங்களை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த முயற்சிக்க வேண்டும் என வலியுறுத்தி வரும் இவ் வேளையில் அவ் ஆணைக்குழுவிற்கு சாட்சியம் வழங்கிய மக்கள் நிம்மதியாக வாழமுடியாது இருப்பதாகவும் நியாயசபை தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந் நியாயசபையின் தீர்ப்பானது ஏனைய அனைத்து ஐக்கிய இராச்சிய நீதி மன்றங்களுக்கும் ஓர் முன்மாதிரியாக அமைய இருப்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய மூவர் தமது புகலிட கோரிக்கை நிராகரிக்கப்பட்டமையை எதிர்த்து மேற்கொண்ட மேன்முறையீட்டிலேயே இந் நியாயசபை ஐக்கிய இராச்சியத்திலிருந்து இலங்கைக்குத் திருப்பியனுப்பப் படுபவர்களும் கொடுமைக்குள்ளாக நேரிடும் எனத் தெரிவித்துள்ளது. இத் தீர்ப்பானது ஐக்கிய இராச்சியத்தில் மட்டுமன்றி ஐரோப்பிய நாடுகள் முழுவதிலுமே தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது என குடிவரவுத்துறை சட்டவாளர் ஒருவர் ஊடகமொன்றுக்குச் செவ்வியுள்ளார்.

திருப்பியனுப்பப்படுபவர்கள் வானூர்தி நிலையத்தில் நிம்மதியாக உள்நுழைய விடப்பட்ட பின்னர் கடுமையான படைக் கண்காணிப்பிற்கு உட்படுவதாகவும் இதற்கென செயற்கைப் பண்பூட்டப்பட்ட (sophisticated) கண்காணிப்புக் கருவிகளையும் கணனி மயப்படுத்தப் பட்ட தகவல் பட்டியலையும் கொண்டு அரச புலனாய்வாளர்கள் இயங்குவதாகத் தெரியவருகின்றது என தெரிவித்துள்ள நியாயசபை, உள்நாட்டுத் தமிழருக்குள்ளும் புலம்பெயர் தமிழருக்குள்ளும் அரச ஆதரவுடன் ஊடுருவியுள்ள காட்டிக் கொடுப்பவர்களாலும் கடும் கண்காணிப்பு அமுலாகியுள்ளது என தெரிவித்துள்ளது.

அத்துடன் இந் நியாய சபையானது இறுதி யுத்தத்தில் சுமார் 40000 - 100000 வரை மக்கள் கொல்லப்பட்டது தொடர்பான சில உண்மைக் கண்டுபிடிப்புக்களையும் செய்ய முடியும் எனத் தெரிவித்திருப்பதானது இலங்கைக்கு ஒன்றும் இனிப்புத் தகவல் அல்ல என்பதே உண்மை.

நாடோடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசமுரசு

# புர்காவையும் நிஹாப்பையும் தடை செய்ய வேண்டும்

முகத்தை மூடி ஆடை அணிவதைத் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பொதுபல சேனா நிடநேர கோரிக்கையில் (Online petition) கையெழுத்திடுமாறு மக்களைக் கேட்டுள்ளது.

பொதுபல சேனாவின் நிறைவேற்றதிகாரி தனது பேஸ்புக் சமூகவலைத்தளத்தில் இதற்கான கோரிக்கையை பகிர்ந்துள்ளார்.

இக் கோரிக்கையுடன் நெதர்லாந்து அரசு தனது நாட்டினுள் மக்கள் முகத்தை மூடிய ஆடைகளை அணிவதைத் தடைசெய்துள்ள கட்டளையையும் இணைத்துள்ளார்.

இந் நிடநேரக் கோரிக்கையை இலங்கையின் பாதுகாப்புச் செயலரை நோக்கி விடுத்துள்ளது பொதுபல சேனா.

## பொதுபலசேனா தடை செய்யப்பட வேண்டும்

பொதுபல செனாவைத் தடை செய்ய வேண்டும் எனக் கொரி நிடநேர கோரிக்கையொன்று (Online petition) கணணி வலைப்பின்னலில் உலாவரத் தொடங்கியுள்ளது. இக் கோரிக்கைக்கு விரும்பிய யாரும் வலைப்பின்னல் ஊடாக இலத்திரனியற் கையொப்பம் இடமுடியும்.

இக் கோரிக்கையை உருவாக்கியவர்கள் பொதுபல சேனாவானது இலங்கைணின் பல்லினக் கலாசாரத்தின் மீதும் சுதந்திரத்தின் மீதும் கடும் அழுத்தங்களைப் பிரயோகிக்கும் அமைப்பு எனத் தெரிவித்துள்ளனர்.

அவ்வமைப்பினரின் நடவடிக்கைகள், பேச்சுக்கள், கடூரச் செயற்பாடுகள் போன்றவை சனநாயகப் பண்பற்றிருப்பதுடன் நாசிசத்தையும் நினைவுபடுத்துவதாக அமைந்துள்ளது என தெரிவித்துள்ளனர்.

பௌத்தத்தைப் பாதுகாப்போம் என்னும் போர்வையில் பௌத்தம் சாரா மதங்களைத் தழுவியுள்ளோரின் வாழ்வை மறுக்கும் செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபட்டுவருவதாகவும் அந் நிடநேரக் கோரிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## வாஸ் குணவர்தனவின் தனயனுக்கும் பிடிவிராந்து

கொலைக் குற்றச்சாட்டில் கைதாகி துடுப்புக்காவலிலுள்ள வாஸ் குணவர்த்தனவின் மகனுக்கும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தன்னுடன் கல்வி நிறுவனமொன்றில் கல்வி கற்ற மாணவனை கடத்தி, கடுமையாகத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டிலேயே ரவிந்து குணவர்த்தனவைக் கைதுசெய்யும் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே அக்குற்றவாளிச் சந்தேக நபருக்கு எதிராக தந்தையுடன் சேர்ந்து பிரபல வர்த்தகரைக் கொலை செய்தது, பாதாள குழுக்களுக்கு ஆயுத வினியோகம் செய்தது ஆகிய இரு குற்றச்சாட்டுக்களும் முன்னெடுக்கப் பட்டுவரும் வேளையில் புதிதாக இம் மூன்றாவது குற்றச்சாட்டும் மீள விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

மாணவனைத் தாக்கிய வழக்கில் ரவிந்துவின் தாய்க்கும் தொடர்பிருப்பதால் அவளுடைய பெயரும் எதிராளியாக அவ் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது.

# பெண்களுடன் வேலை செய்வது கடினமானது – சபாநாயகர்

பெண்களுடன் வேலை செய்யும் போது அவர்கள் சில வேளைகளில் வேலை செய்வதற்குத் தடையாக இருப்பார்கள் என சபாநாயகர் சாமல் ராசபக்ச 11ம் திகதி பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

இக்கருத்தை அவர் தெரிவிக்கும் போது பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியினுள் ஓரிடத்தில் அமைச்சர் சுமேதா ஜெயசேனாவின் தலைமையில் கூட்டமொன்றை நடாத்திக் கொண்டிருந்தனர்.

"இதனை நான் தெரிவிக்கவில்லை. ஆனால் பெண்கள் எங்கெல்லாம் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்கின்றார்களோ அங்கெல்லாம் அவர்கள் ஏனையோரது கருத்தை கணக்கெடுப்பதில்லை. இவ்வாறு பல இடங்களில் நடைபெறுகின்றன. பெண் ஒருவர் பிரதேசச் செயலாளர் ஆகவோ மாவட்டச் செயலாளர் ஆகவோ அல்லது வேறு எங்காவது உயர்ந்த பதவிகளை வகிக்கும் போது தமது அதிகாரத்தை அவ்விடமெங்கும் பரப்ப முயற்சிப்பார்கள். அதனால் நீதி அங்கு மறைந்துபோய்விடுகின்றது" என அவர் மேலும் தெரிவித்தார்.

## பெண்களை வெள்ளையாக்கும் பெண் நாட்டை விட்டுத் தப்பியோட்டம்

பெண்களை அழகு படுத்தும் கலையில் திப்புளோமாப் பட்டம் பெற்றவர் என்ற பெயருடன் உடல் அழகினைப் பெற்றுத் தருவதாகக் கூறி சில மருந்துகளைத் தனது வாடிக்கையாளருக்கு விற்றுப் பல லட்சங்களை விழுங்கிய பெண் நாட்டை விட்டோடி தற்போது துபாயில் வசித்துவருவதாகச் செய்தி வெளியாகியுள்ளது.

கே. சுஜீவா எனப் பெயர்கொண்ட இவர் பெண்களின் உடலை மெலிவிப்பதிலும், பெண்கள் வயதடையும் போது இழக்கும் வெண்நிறத்தை மீட்டுத் தருபவர் என்றும் தன்னை அறிமுகப்படுத்தியிருந்தார்.

அதற்காக ஊசி மருந்துகளைக் கூட தனது வாடிக்கையாளருக்கு வழங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# அபிவிருத்திக்குப் பச்சைக் கொடி சர்வதேச நாணய நிதியம்

இலங்கையில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்களுக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு நல்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு வந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் வலய பணிப்பாளருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை பொருளாதார மாநாட்டில் கலந்துகொள்வதற்காக வருகைதந்துள்ள பணிப்பாளர் ஜனாதிபதியை அலரிமாளிகையில் நேற்று சந்தித்து கலந்துரையாடினார். இதன்போதே அவர் இலங்கைக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு நல்குவதாக தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிக்கின சுருட்டுக்கள்

22.5 மில்லியன் ரூபா பெறுமதியான சட்டவிரோத 15 பெட்டி சிகரெட்டுக்களை சுங்க அதிகாரிகள் கடந்த வியாழக்கிழமை மீட்டுள்ளனர்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக நாட்டுக்குள் கடத்தப்படவிருந்த நிலையிலேயே இந்த சிகரெட்டுக்கள் மீட்கப்பட்டுள்ளன. துபாயிலிருந்தே இந்த சட்டவிரோத சிகெரட்டுக்கள் இறக்குமதி செய்யப் பட்டுள்ளன.

# நாட்டின் தனித்துவ அடையாளங்கள் பொதுநலவாய மாநாட்டில் வெளிப்படும்

நாட்டின் தனித்துவ அடையாளங்களை பிரதிபலிக்கும் வகையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாடு ஏற்பாடு செய்யப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

தேசிய தன்மையும், நாட்டின் தனித்துவ அடையாளங்களையும் பிரதிபலிக்கும் வகையில் நிகழ்வுகளை ஏற்பாடு செய்யுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாடு ஏற்பாடுகள் குறித்த கூட்டம் அலரி மாளிகையில் நடைபெற்றுள்ளது. மாநாட்டிற்கான ஏற்பாடுகள் குறித்து இந்த கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மாநாட்டுக்கு சமாந்தரமாக பல்வேறு கண்காட்சிகள், போட்டிகள் என்பனவும் ஒழுங்கு செய்யப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

CHOGM 2013
Sri Lanka

# இனத்திற்கென பிரதேசச் செயலகமா? இல்லை – அமைச்சர்

அரசாங்கம் இன சமூகங்களின் அடிப்படையில் பிரதேச செயலகங்களை நிறுவாது. ஒவ்வொரு இன சமூகத்திற்கும் தனித் தனியான' பிரதேச செயலக அலகுககளை வழங்குவது ஆபத்துக்களை ஏற்படுத்தும் என பொது நிர்வாக அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வழங்கினால் தேசிய ஒற்றுமை சீர்குலையும். அரசாங்க அலுவலகங்கள் சிங்கள, தமிழ் முஸ்லிம் மக்களுக்கு சேவையாற்றக் கூடிய வகையிலேயே உருவாக்கப்பட்டுள்ளது.

அரச அலுவலகங்கள் சகல இன மக்களின் வரிப் பணத்திலேயே இயங்குகின்றன.

எனவே இன சமூக அடிப்படையில் பிரதேச செயலகங்களை அமைத்துக் கொடுக்க முடியாது. இனங்களுக்கு இடையில் பிளவு ஏற்படுவதனை நாம் விரும்பவில்லை, இன சமூகங்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

கல்முனையில் நிலவி வரும் பிரதேச செலயகங்கள் தொடர்பிலான பிரச்சினைக்கு தீர்வாக தரமான ஒரு பிரதேச செயலகத்தை நிறுவ வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.கல்முனையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நதி மூலங்கள் பற்றியெரிந்து இருள்படை படையாக அலைந்து திரிந்தன. இருள் மண்டிக்கிடந்த வெளிக்குள் ஒன்றுடன் ஒன்று மோதுண்டு விபத்துக்கள் அதிகமாகி வெளிர் நிறத்தில் மரக்கிளைகள் தோன்றி மறைந்தன. அன்றைய நாளின் இரவுப்பொழுதின் குறித்த கணமொன்றில் ஆரம்பமானநீர் சொட்டல் காற்றுடன் சேர்ந்து கொண்டு தொடர்ந்து ஐந்து நாட்கள் மூச்சுவிடாமல் கொட்டிக் கொண்டிருந்தது. தரைக்கு வந்த துளிகள் மணற்பருக்கையுள் நுழைந்து நிரம்பியது போக செல்ல வழிதெரியாது. ஆங்காங்கே கூட்டம் போடத் தொடங்கின. இரண்டாம் நாளிலேயே கூட்டங்கள் எல்லாம் சேர்ந்து தொடராகத் தங்கி மாநாடுகளும், பேரணிகளும் நடாத்த தயாராகின. எங்கள் நிலமும் போராட்ட களமாகியது. மணிக்கு மணி தங்குபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க, ஒட்டகமாகி ஊர்ந்து கூடாரத்துள் தலை நீட்டின.

கிடந்ததை அவித்து மூன்று நாட்கள் தின்றோம். சில்லிடும் தாக்குதலால் அம்மா கட்டலில் கேள்விக்குறியானாள். குழந்தைகளின் கப்பல்கள் வீட்டினுள் ஆடிக் கொண்டிருந்தன. தண்ணீராலான உருவங்கள் எங்களை விழுங்கிவிட அசைந்து திரிந்தன. நாலாம் நாளில் நான் மட்டும் நீர் மிதித்து வெளியேறினேன். சந்தைக்குள் நுழைந்து விரைவில் பழுதடைந்து விடாத உணவுப் பதார்த்தங்களை இருந்த பணத்துள் அடங்கிவிடுவதாகத் தேடினேன்.

இத்தனை குளிரிலும் உணவுப் பண்டங்களின் விலைகள் பற்றியெரிந்தன. தனித்தனியே அலைந்த வாய்கள் புலம்பித் தீர்த்ததில் நிவாரணம் படிவங்களை வழங்கிக் கொண்டிருப்பதை அறிந்து சூட்டைக் கிளப்பிப் பறந்தேன். நீள்பாம்பு வரிசையில் ஒரு முள்ளந்தண்டு இணைப்பாய் போய் நின்றேன். சில கணத்திலேயே இன்னமும் அது நீண்டு அமேசான் காட்டுக்குச் சென்று கொண்டிருந்தது. நகர்ந்து வாயாய் மாறிய நான் இரட்டை நாக்கால் விண்ணப்பப் படிவத்தைக் கவ்வி நீருக்குள் அசைந்து கட்டிலில் ஏறினேன்.

படிவத்தில் தகவலைப் பூர்த்திசெய்ய முற்பட்டு ஒவ்வொரு அட்சரத்தையும் பதிகையில் என் வயிறு பசியால் அழுதது ஞாபகத்துள் இருந்தது.

கண்ணின் துளிகளும் அதில் கொட்டியிருந்தன. பூரணப்படுத்தப் பட்டபின், ஒப்பமிட்டு அதில் ஒரு பிரதியை தேவை கருதி எடுத்து வைத்துக் கொண்டேன். பின்னர் தேவைப்பாடுகள் அதிகரித்துச் செல்லச்செல்ல பிரதிகளின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே இருந்தது. எத்தனை பிரதிகள் பின்னர் எடுக்கப்பட்டதென்ற கணக்கெடுப்பு என்னிடம் இல்லை.

இன்று பன்னிரெண்டாம் தடவையாகவும் இக்காரிலயத்துக்கு வருகை தந்தேன். வழமை போலவே வரவேற்பாளினி காரணம் கேட்டாள். கடந்த பதினொரு தடவைகளும் சொன்ன காரணத்தையே ஒப்புவித்தேன்.

சில சொற்கள் ஒழுங்குமாறியும், சேர்ந்தும், மறைந்தும் இருக்கலாம். அவள் அதையெதையும் கவனித்ததாயில்லை. பையை இறாக்கையில் வைத்துவிட்டு எனக்கான முறை வரும் வரை காத்திருக்கச் சொன்னாள். ஏழாம் முறையிலிருந்து என் கண்ணுக்குப்படத் தொடங்கியிருந்த சிங்கள மொழியில் இருந்த கடிதத்தை உற்றுப்பார்க்கத் தொடங்கினேன். அது ஆபிரகாம்லிங்கன் தன் மகனின் ஆசிரியருக்கு எழுதிய கடிதம். சிங்களத்தை சரளமாக வாசித்துவிடும் திறன் என்னிடம் இல்லாத போதும்

இருவார சிறுகதை

# அட்சரம் தின்னும் படிவங்கள்

திசேரா

தெரிந்த எழுத்துக்களைக் கூட்டி அள்ள ஆரம்பித்த முயற்சியைத் தொடர்ந்தேன். இருவரிகளைக் கடப்பதற்குள் எனைக் கை நீட்டி- போகச் சொன்னாள். என் விண்ணபத்தை வைத்திருக்கும் இலிகிதரின் முன்னாள் பவ்யமாக கைகளைக் கட்டிக் கொண்டு நின்றேன். உருண்டையான தடித்த கண்ணாடிக்கு மேலால் ஷஷவந்து விட்டாயா" என்பது போல பார்த்துவிட்டு கோப்புகளுள் மூழ்கினாள். நானோ அமைதியை காத்துக் கொண்டிருந்தேன். அதை எல்லா இடமும் பரப்பி விட முடியா விட்டாலும் அவ்விடத்தில் அதிலும் என்னிடத்தில் நிறையவே இருந்தது. ஏதோ நினைப்பு வந்தவளாய் அதைக்குலைத்து எழுந்து புன்சிரிப்பொன்றை கண்களுக்கு தந்துவிட்டு,

''உன்னுடைய படிவம் தொடர்பாக மேலதிகாரியை சந்தித்து விட்டு வருகிறேன்'' இருக்கையை வெறுமையாக்கிவிட்டு போனவள், மறுகணமே திரும்பிவந்து "வெளியே இருக்கையில் அமர்ந்து கொள் - அழைக்கின்றேன்" என்றாள். மீண்டும் ஆபிரகாம் லிங்கன் முன்னால் வந்தேன். வாசிக்க மனம் முனைப்புக் காட்டாததால் பின்னல் நாற்காலியில் அமர்ந்து கொண்டேன்.

எனக்குள் பயம் தொற்றிக் கொண்டது. முன்னைய தடவைகள் போல விண்ணப்பப் படிவத்தில் ஏதாவது எழுத்துத் தொலைந்து அதைக் கண்டுபிடித்து விடும்படி கூறி விடுவாளோ, - யாராவது கடவுள் ஒருவரைக் கூப்பிட்டு அருகில் இருத்திக் கொண்டால் மெலிதாகிப் படபடத் திருக்கும் நோய்மை கொண்ட மனதிற்கு சுகமளிப்பதாயிருக்குமெனப்பட்டது. யாரை அழைப்பது என்பதிலும் குழப்பம் நீண்டது. பதற்றம் தொற்றிக் கொண்டதிலிருந்து நான் இன்னொரு மாதிரியாய் மாறி இருந்ததை நானே உணர்ந்தேன்.

முதலாம் முறை வந்திருக்கையில் எல்லாமும் புதிதாக இருந்தது. தொற்றிக் கொண்ட பதற்றத்தினிடையே நம்பிக்கையின் இழை ஓடிக் கொண்டிருந்தது. செயலாளரை சந்திப்பதற்கான அந்த நாளில் வரவேற்பாளின் முன்னால் இருந்த பதிவேட்டில் என் பெயரை பதிவு செய்தபின் அவள் என்னிடம் தந்த எண்ணைப் பெற்றுக் கொண்டு எட்டிப்பார்த்தேன், என் இலக்கம் அழைக்கப்பட இருக்கும் கால தாமதத்தைக் கணக்கிட்டுக் கொண்டு தேனீர் அருந்திவர போசனசாலை தேடினேன். பால்மணக்கும் குழந்தைகளுடனும், பெருத்த பயிறுடனுமே அனேக பெண்கள் நின்றார்கள். பிரச்சனைகள் கட்டங்களை மாற்றிக்கொண்டு பல்பரிமாணத்தில் கண்முன்னால் விகாரமெடுக்கும் - எனக்கென்ன இருக்கப் போகின்றது. என அவர்கள் எண்ணி இருப்பார்கள். படியிறங்கி நடந்தேன். திரும்பி வருகையிலும் கூட்டம் கலைந்திருப்பதாக தெரியவில்லை. வரிசையில் போய் நின்றேன். மணி உருள கால் கடுப்பெடுத்தது. நின்று வேர் இறங்கப் போகும் கணத்தில் இருக்கையில் அமர்ந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. இருக்கை மாறி மாறி என் எண்ணுக்கான இடத்தை தக்க வைத்துக் கொண்டு இருந்தேன். நான் உள்ளே செல்ல வேண்டிய முறை வந்தது.

குறுந்தாடியுடன் சுழலும் நாற்காலியில் [illegible] உருவத்துடன் ஆடிக்கொண்டிருந்த செயலாளரின் முகத்தில் மீசைக்கும் தாடிக்கும் இடையில் நீந்திய உதடுகளில் சாதகமான வார்த்தைகளை தேடினேன்.

வணக்கம் சொல்லி அமர்ந்து கொண்டு எனக்குத் தெரிந்த சிங்களத்தில் என் விண்ணப்பப்படிவம் குறித்த முறைப்பாட்டைத் தெரிவித்தேன். சிறிய புன்னகையுடன் பிரதியைப் பெற்று ஒட்டுப்பசையுடன் இருந்த குறிப்புப் துண்டை அதில் ஒட்டி குறித்த இலிகிதரிடம் உரையாடச் சொல்லி அனுப்பினான். அவளை இனங்கண்டு மேசை முன்னால் நின்றேன். கையில் செயலாளர் குறிப்புடன், விண்ணபத்தின் பிரதியும் இருந்தது. நீட்டினேன், "வெள்ளம்" என்றேன் பார்த்துவிட்டு ''இன்று வேலை அதிகம் நாளை மறுநாள் வா" என்றாள்.

இரண்டாம் முறை - அன்று வெள்ளிக்கிழமை சம்பிரதாயத்தைக் கடந்து அவள் மேசை முன்னால் வந்து நின்றேன். என்னிடம் விசாரித்து விட்டு கணினியைத்தட்டி ஒரு கோப்பில் எதையோ தேடினாள். ஒரு விண்ணபத்தைத் தனியே உருவி மேசையில் வைத்துப் புரட்டினாள். அது எனதாக இருந்தது. அவள் கண்கள் சிவப்பானது. எழுந்தவள் என் தலையில் கொட்டி படிவத்தைக் காட்டினாள். வலிகலந்த ஆச்சரியத்துடன் பார்த்தேன். எழுத்துக்கள் இன்றி நிறைய இடைவெளிகள் தெரிந்தது. உற்று அவதானித்தேன். 'ப' வரிசையின் எழுத்துக்கள் பக்கங்களில் காணாமல் போயிருந்தன. கோபத்துடன் வலது புற உள்ளங்கையில் மணிக்கட்டு சந்திக்கும் இடத்தினால் என் நெற்றியைத் தாக்கி என்னென்னமோ வார்த்தைகளால் ஏசினாள். நான் மூன்று முறை தலை சுற்றி விழுந்தேன்.

எனக்கு இழைத்துக் கொடுக்கப்பட்ட அவமானத்துக்கு எதிராக சத்தியாக்கிரக போராட்டமொன்றை காலியின் முகத்தில் நிகழ்த்தி நாடறியப் பண்ணுவதா, வீட்டின் வழிசெல்லும் பாதை சந்திப்பில் இருந்த பேரூந்து தரிப்பிடத்தின் மேலேறி உண்ணாவிரதம் இருந்து ஊரறியப் பண்ணலாமா என்று தீவிரப்பட்டேன். ஏதாவது பண்ண வேண்டுமென நரம்புகள் முறுக்கேறி தலைக்குள் மின்னலடித்து காட்சிப் படிமங்களை மாற்றி மாற்றி தூண்டிக் கொண்டே இருந்தது.

இப்போது அவள் அழைத்து என் படிவத்தைக் காட்டினாள். அவளது வேலைகள் என்னால் குழப்பமுறுகின்றன என்றாள். முன்னதாக என் விண்ணப்பப் படிவத்தைக் கவனித்துக் கொண்டவள் எட்டாம் முறையுடன் ஓடிப்போனாள். என் தொந்தரவுக்கும், படிவத்தின் மாயாஜாலப் பயமுறுத்தலுக்கும் பயந்துதான் சென்றிருக்க வேண்டும். ஒன்பதாம் முறையிலிருந்து இவளைத்தான் சந்தித்து வருகின்றேன்.

ஒன்பதாம் முறை வந்தேன். வரவேற்பாளினியைச் சந்தித்தேன். விபரத்தைக் கூறி உள்ளே நுழைந்தேன். எனது இலிகிதரின் நாற்காலியில் இவள் இருந்தபடி கணினியை இயக்கிக் கொண்டிருந்தாள். நான் அருகே நெருங்கவும் அவள் 'சிக்,கலில் மாட்டினாள். அவள் கணினியில் கோர்த்திருந்த விபரம் அச்சு இயந்திரத்தில் வரவில்லை. அது வெற்றுத் தாள்களையே தள்ளியது. அந்தக் களேபரத்தில் யார் யாரையோ அழைத்துக் கொண்டிருந்தாள். எனைத் தள்ளிவிட்டு வந்த ஒருத்தன் ஏதோ இயக்கிகளை மாற்றிமாற்றி சரிசெய்து கொடுத்தபின் - தன் வேலையை முடித்த பின்னரேயே எனை நிமிர்ந்து பார்த்தாள். என் கஸ்டங்களை அடுக்கினேன். எனக்கிருக்கக்கூடிய சிக்கல்களை அவள் புரிந்து கொள்வதாகவும் உடனே உதவக் கூடிய நிலையில் தான் இல்லையென்பதையும் தெரிவித்து விட்டு தான் இன்றுதான் வந்திருப்பதாகவும் சிரேட்ட இலிகிதரிடம் முறையிடும்படியும் கூறினாள். இயலாமை தொற்றி கண் சுரக்க சிரேஸ்ட இலிகிதரின் முன்னால் மண்டியிடாக் குறையில் கை கட்டி நின்றேன். என்னிடம் இருந்த பிரதியை வாங்கிப் பார்த்தாள். 'இது பழையதாக இருபப்தால் தேடிப் பார்க்க வேண்டும்' நாளை மறுதினம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு சொல்லப்படும் தினத்தில் வரும்படி அனுப்பினாள். அழுகையை சிரிப்பாக மாற்றிக் கொண்டு வந்தேன். ஆபிரகாம் லிங்கன் சொன்னான். - "தோல்வியைக் கற்றுக் கொடுங்கள்."

இப்போதும் அவள் முனகிக் கொண்டே இருந்தாள். என் படிவ எழுத்துக்கள் தேய்ந்து விட்டன. மூலப்பிரதியை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. மேலதிக செயலாளரைச் சந்தித்தால் தீர்வுக்கான வழிகிடைக்க வாய்ப்புண்டு நிறைய வரைபடங்கள் அவரிடம்தான் உண்டு என்றாள். வார்த்தைகள் எதுவும் இன்றி திரு குடாகம ஐயாவைச் சந்திப்பதற்கான வரிசையில் முப்பத்து இரண்டாவது ஆளாய் நின்றேன். அரைமணிநேரம் கரைந்தது. வரிசை நகர்வதாகத் தெரியவில்லை. அலுவலக நேரம் முடிவதற்கு பத்து நிமிடங்கள் இருந்தன. பரபரப்பு எனைத் தொற்றிக் கொண்டது. வரிசையை சீரமைத்து முறைப்படி அனுப்பிக் கொண்டிருந்த பாதுகாப்பாளரிடம் சென்று வினவினேன். "ஐயா எல்லோரையும் விசாரித்து விட்டுத்தான் செல்வார். நீர் வரிசையில் சென்று நில்லும்" என்றான். திரும்பிவந்து என் இடத்துள் நுழைந்தேன். பின் நின்றவள் தான் அதிகாலை மூன்று மணிக்குப்புறப்பட்ட பயணம், கடைசிப் பேரூந்தையேனும் பிடிக்க வேண்டுமெனவும், தான்படும் சிரமங்களையும் முன் நின்றவனிடம் கதைத்துக் கொண்டே முன் நகர்ந்தாள். அவளை தடுத்து விடவோ, பின்னகர்த்தி விடவோ தைரியமின்றி அவளை விளங்கி நின்றேன்.

வெள்ளை நிறத்தில் குண்டாக இருந்தவரின் முகத்தில் எனக்கான கருணைத் துளியைக்கண்டேன். முறையிட்டேன். படிவத்தின் பிரதியை வழங்கினேன். ஆராய்ந்தார். "அனுமதி வழங்க முடியும் - ஆனால் நீர் பாதிக்கப்பட்டவர் என்பதை நான் எப்படி நம்புவது'' - நைதரசன் குண்டு வெடித்துச் சிதறியது. அவர்காட்டிய இடத்தில் அவதானித்தேன். கிராம அதிகாரியின் கையொப்பம், பதவி இலட்சனை தவிர்ந்த அத்தாட்சிப் படுத்தியதும், அனுமதித்துக் குறித்த எழுத்துக்களும் தொலைந்து போயிருந்தன. என்னிடமிருந்த இன்னுமொரு பிரதியை வழங்கினேன். அதிலும் அவர் பார்க்கையில் அப்படியே இருந்தது. "தொலைந்ததை தேடிக் கண்டுபிடிக்க உனக்கு நாட்கள் செல்லும், ஏற்கனவே இதன் எழுத்துக்கள் தேய்ந்தும், பழுதடைந்தும் உள்ளன. அதனால் புதிய படிவத்தை நிரப்பிக்கொண்டு வா"

இரண்டாம் பிரதியை பெற்றுக்கொண்டு திரும்பினேன். என் கட்டிலுக்கு அருகிருந்த முக்காலியில் விண்ணப்பப்படிவத்தை வைத்து இரவு முழுவதும் அவதானித்துக் கொண்டிருக்க வேண்டுமென நினைத்தேன். எண்ணங்கள் பறக்கப்பறக்க தலை சூடாகிக் கொதித்தது. கண் எரிவு காண கசக்கி ஏக்கப் பெருமூச்சு விட்டேன். எழுத்துக்கள் கால் முளைத்து நகர்ந்து சென்று விடுகின்றனவா? அல்லது படிவம் அட்சரங்களைத் தின்று விடுகின்றனவா?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இயற்கை



மனிதா!
மரம் ஒன்றை நடு
உன் வம்சத்துக்கு
செல்வத்தைச்சேர்
மரம் ஒன்று உன்னால்
அழிக்கப்பட்டால்
உன் செல்வங்கள் அழிந்துவிடும்.

மனிதா!
இயற்கையுடன் செயற்கை எனும்
சொற்பத்தை வைத்து
போர் புரியாதே
இயற்கை வலிமையானது
உன்னை வேருடன் சாய்த்துவிடும்

மனிதா!
இயற்கை கண்ணகி போன்றது
அமைதியாக இருக்கும்போது
லட்சணமாக இருக்கும்
இயற்கை ஆக்ரோஷம் ஆகினால்
உலகமே அவலட்சணமாகிவிடும்

ஆகவே மனிதா!
உன்னை நேசி!
மண்ணை நேசி!
உயிரினங்களை நேசி!
இயற்கையையும் நேசி!

ஜெ.துவாரகா
9B, தி/ புனித மரியாள் கல்லூரி,
திருகோணமலை

**உங்கள் ஆக்கங்களும்**
**இடம்பெற வேண்டுமா? ......**
**கவிதைகள். கதைகள்.**
**இலக்கிய வரிகளை**
**மலைமுரசிற்கு அனுப்புங்கள்**

## சோகமே எனக்குச் சொந்தம்...

என் பிரியசகி
நிலவு கூட சுட்டெரிக்கும்
வக்கிரத்தை உன்னிடம் தான்
கற்றுக் கொண்டதா?

எனக்குள் ஒரு கேள்வி
விடை தெரியாமல்
அழுது தேய்கின்றது
படர்ந்தகொடி ஏன் பாம்பானது?
புரியாத புதிராய் உன்
நாடகங்கள் திரை மூடியது

அதுதான் விதியின் வலுவா!
நினைத்துப் பார்க்கின்றேன்
இணையாத துருவம் என
நீ பிரகடனப்படுத்துகின்றாய்
உன் கற்பனை கற்சிப்பது
நிஜம்தானா!

ஒரு தெருப்பாடகனாய்
சுவர் ஓர ஓவியனாய்
ஒரு தேவதாசாய்
பிறரின் பழிப்புக்கு

உன் இதயத்தை
உண்மையாகவே
பூஜித்த இந்த மலர்
இங்கே கசங்கிக்கிடக்கின்றதே
இரக்கம் இல்லா உன்
நெஞ்சத்தை தோண்டிப்பார்
ஈரம் இருக்கின்றதா என்று!

அது இருந்தால்
அங்கே நான் இருப்பேன்
இல்லையேல்
ஒரு நூலறுந்த பட்டமாய்
என்றும் உன் நினைவுகளை
தாங்கியவளாக

பீ.எப்.பஸ்ரா

## ஏமாற்றம்

வைகாசிக் காற்று எமக்கு
வசந்தமுடன்
வீசியிருக்க வேண்டும்...

வைகாசிப் பௌர்ணமியும்
எம்மை
குளிர் வித்திருக்க வேண்டும்...

ஆனால், வீசிய காற்றில்,
கரிமருந்து வாடையுடன்
பிணவாடையும் கலந்திருக்க...

ஒளிர்ந்த நிலவில்
இரத்தக்கறை படிந்திருக்க...

கடந்து சென்ற நாட்களும்
கனத்த நாட்களாய்
வடிந்து போயின...

கரைந்த குருதியையும்,
விழுந்த சுவடையும்,
தாங்கிய வடுவையும்,
துடித்த அசைவையும்,

மறந்து விட்டுப்போக
மண் மூடிப்போகின்றன -
வலிகளின்
வழித்தடங்கள்...
இவ்வருட வைகாசியும்
தமிழனை
ஏமாற்றிவிட்டுத்தான் போனது...

- சரிதன் -

## கனவுகள்



நமது நம்பிக்கைகள்
நலிவடைந்து
மெலிவடைந்து விட்டன.

அடிபட்டுப் போனது
நம் தேவைகள் மட்டுமல்ல
நம் வாழ்வின் இருப்பும்தான்

தளர்ந்து போன
எம் வாழ்வை
தக்கவைப்பதே
பெரும்பாடுதான்

ஆழ்ந்த
அனுதாபங்கள் மத்தியிலும்
வாழ்ந்துதான் ஆக வேண்டும்
என்ற நியதிக்குள் நாம்

புதிய விடியல்
விரைவில் புலருமென
காத்திருப்போம்
காலங்கள் கரைந்து சென்றாலும்
நம் கனவுகள் ஒரு நாள்
கைகூடுமென
காத்திருப்போம்.

சி.சஜித்காந்
9E, தி/ கோணேஸ்வரா
இந்துக்கல்லூரி,
திருகோணமலை

# திருமலை மத்திய வீதி – நட்டஈடு இன்றி சொத்திழக்கும் மக்கள்

பாலையூற்றான்

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பரவலாக நாடெங்கும் இடம்பெற்று வருகின்றன. அதேவேளையில் பொதுமக்கள் மீது சுமத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற வாழ்க்கைச் செலவுகள் தொடர்பாக நாடெங்கும் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், கண்டனங்கள் இடம்பெற்று வருவதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

திருகோணமலை நகரசபை, நகரின் மத்திய வீதியை அகலிக்கும் பணியை நேுடுஊனீ எனும் கருத்திட்டத்தின் கீழ் ஆரம்பித்துள்ளது. ஆனால் அது ஒரு அபிவிருத்தி நடவடிக்கையாக அமைந்திருந்தாலும் சட்டரீதியாக அங்குள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டை வழங்க மறுத்தமையால் அந்த அபிவிருத்தி நடவடிக்கை இன்று வரை ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

இதனால் இவ்விடயம் திருகோணமலை நீதிமன்றம் வரை கொண்டு செல்லப்பட்டு கடந்த வாரம் தீர்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. முறைப்பாட்டுக்காரர்களான பொதுமக்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டாலும் இரு சாராரினதும் தவறுகள் மிக தெளிவாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

குறித்த வழக்கின் மனுதாரர்கள் வீதி அகலிப்பு விடயத்தில் தமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை, தாம் நகரத்தின் அபிவிருத்தியை விரும்புவதாகவும் தாம் கோரி நிற்பது இழக்கும் சொத்துக்கு தகுந்த இழப்பீட்டை மாத்திரமே என்று கூறுகின்றனர்.

திருகோணமலை மத்திய வீதியை சார்ந்த பொதுமக்கள் சுமார் 100 வருடங்களுக்கு மேல் அப்பகுதியில் வாழ்ந்து வந்துள்ளனர். வீதி அகலிப்பு நடவடிக்கையை ஆரம்பிக்கும் போது அங்குள்ள பொதுமக்களின் நிலைப்பாட்டை, பொருளாதார நிலைமை ஆகியவற்றை நன்கறிந்து செயல்பட நகரசபை தவறியதை இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது சாலமும் பொருத்தமானதாகும்.

இன்றைய வாழ்க்கை செலவின் உயர்வில் கட்டடங்களை அகற்றி, புதிய கட்டடங்களை அமைப்பது என்பது சாதாரண விடயமல்ல. அது மாத்திரமல்ல அவர்களின் பாரம்பரியக் காணிகளில் இருந்து சுமார் 7அடி நிலத்தை இதற்காக இழப்பது என்பதும் சாதாரண விடயமல்ல.

பொது விடயங்களின் நிமித்தம் பொது மக்களின் ஆதனங்களை சுவீகரிக்கும் போது அதற்கான நட்டஈட்டை வழங்க வேண்டுமென்பது ஒரு சாதாரண நியதி. ஆனால் நகரசபையோ திடீரென தாமாகவே காலங்களை குறித்து கட்டடங்களை அகற்றும் படியும், இழப்பீடு வழங்கப்பட மாட்டாதெனவும் தவறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் மனிதாபிமானமற்ற வகையில் அறிவித்தல் விடுவது அநாகரீகமானதே.

இதற்கிடையில் பலர் அச்சுறுத்தப்பட்டு கட்டடங்களை அகற்றிய நடவடிக்கைகளையும் இங்கு சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. நியாயம் நீதி தெரிந்தவர்கள் நீதிமன்றம் சென்றார்கள். பண வசதி இல்லாதவர்கள் நகை நட்டுக்களை விற்று ஈடு வைத்து நகர சபையின் கட்டளைக்கு அடிபணிந்தார்கள்.

இந்த விடயத்தில் நகர சபை நிர்வாகத்தை கண்காணிக்கும் அரச திணைக்களங்கள் கூட இங்கு நியாயமாக நடந்து கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது. அத்துடன் இவ்விதமான அபிவிருத்திகளின் போது பொதுமக்களுக்கு ஏற்படும் நன்மை, தீமை ஆகியவற்றை அலசி ஆராய்ந்து பார்க்கவும் தவறிவிட்டது. குறிப்பாக அரசாங்க வர்த்தமானியில் இவ்விடயம் தெடர்பாக பொது மக்களால் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னரே அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டது. இவ்வாறான பல அடிப்படை கடமைகளில் இருந்து நகரசபை தவறியுள்ளதையும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. கட்டிடங்களுக்கு தாமே அனுமதி வழங்கிவிட்டு அவைகள் அனைத்தும் வீதிக் கோட்டினுள் வருகின்றது என்று வலியுறுத்த முடியாதென்றும், இழப்புக்கள் தொடர்பில் நகர சபை நியாயமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் நீதிமன்றம் கருதியுள்ளது.

அது மாத்திரமல்ல சொத்துக்களை இழக்கும் உரிமையாளர்களுடன் உடன்படிக்கைகள் செய்யப்பட்டு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்பதும் ஏற்பாடாகவுள்ளதையும் நீதிமன்றம் சுட்டிக் காட்டியுள்ளது. குறித்த வீதி அகலிப்பு பணிகள் தொடர்பில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டு அனைவரும் ஏகமனதாக ஏற்கக் கூடிய வகையிலான தீர்மானம் மேற்கொள்ள வேண்டுமெனவும் நீதிமன்றம் சுட்டிக்காட்டத் தவறவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்டரீதியாக எந்தவித இழப்பும் வழங்கப்பட மாட்டாதென திருகோணமலை நகரசபைத் தலைவர் எழுத்துமூலம் அறிவித்தல் விடுத்தாலும் குடியியில் நீதிமன்றத்தில் குடியியல் வழக்கொன்றை தாக்கல் செய்து நிவாரணத்தைப் பெற போதிய வாய்ப்பும் சந்தர்ப்பமும் உள்ளதென குறித்த வழக்குத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது மாத்திரமல்ல தேவையான நிவாரணமானது திருகோணமலை நகரசபையால் மேற்கொள்ளப்படவுள்ள சட்ட நடவடிக்கைகளில் பெறப்பட மனுதாரர்களுக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் உண்டு எனவும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இங்கு இரு சாராரும் ஓர் உடன்படிக்கைக்கு வந்து இந்த பிணக்கை தீர்க்காவிட்டால் நகரத்தின் அழகு குன்றிவிடுவது மாத்திரமல்ல போக்குவரத்தில் பல அசௌகரியங்களுக்கு மக்கள் முகம் கொடுக்கவும் நேரிடும் என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

எனவே திருகோணமலை மத்திய வீதியை அகலிக்கும் அபிவிருத்தி நடவடிக்கையில் அங்குள்ள சகல மக்களும் தத்தமது பங்களிப்பையும், ஒத்துழைப்பையும் அளிக்க ஆயத்தமாகவுள்ளனர் என்பது நகரசபைக்கு நன்கு தெரிந்த விடயம். இந்த அபிவிருத்தியால் பயனடையப்போவது சகலருமே. காலத்தை வீணடிக்காது காரியத்தில் கண்ணாக இருப்பது விவேகமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சிங்கம் 2"



# சினிமுரசு

தூத்துக்குடி துறைமுகத்தில் ஆயுதக் கடத்தல் நடைபெறுகிறது என்ற ரகசிய தகவல் வருகிறது. இதனை ரகசியமாக கண்காணிப்பதற்காக போலீஸ் அதிகாரியான சூர்யாவை மாநில உள்துறை அமைச்சர் விஜயகுமார் அனுப்பி வைக்கிறார். தூத்துக்குடியில் உள்ள பள்ளியில் என்.சி.சி. ஆசிரியராக பணிபுரிந்து கொண்டே சூர்யா ரகசியமாக கண்காணித்து வருகிறார். இந்நிலையில் அதே பள்ளியில் படிக்கும் ஹன்சிகா மோத்வானி, பள்ளியில் வினாத்தாள் திருடி சூர்யாவிடம் மாட்டிக்கொள்கிறார். இதை மற்றவர்களுக்கு தெரியப்படுத்தாமல் சூர்யா மறைத்து விடுகிறார். இதனால் சூர்யா மீது காதல் வயப்படுகிறார் ஹன்சிகா. ஆனால் இந்தக் காதலை விளையாட்டுத்தனமானது என சூர்யா அவருக்கு புரிய வைக்கிறார்.

ஒரு பார்வை

இதற்கிடையே தூத்துக்குடி துறைமுகத்தில் போதைப்பொருள் கடத்தப்படுகிறது என்பதை கண்டுபிடிக்கும்' சூர்யா, இதற்கு காரணம் ரகுமான் மற்றும் சர்வதேச போதைப்பொருள் கடத்தல் தலைவன் டேனி என்பதையும் அறிகிறார். ஒரு கட்டத்தில் தூத்துக்குடியில் சாதிப் பிரச்சினையால் கலவரம் ஏற்படுகிறது. அப்போதுதான். கலவரத்தை கட்டுப்படுத்த துணை கமிஷனராக பொறுப்பேற்கிறார். சூர்யா போலீஸ் அதிகாரி என்பது தெரிகிறது. இது ஒருபுறம் இருக்க சூர்யாவின் காதலுக்கு பச்சைக்கொடி காட்டிய அவரது தந்தை அனுஷ்காவை திருமணம் செய்து வைக்கவும் சம்மதிக்கிறார். இந்நிலையில் போதைக் கடத்தல் செய்துவரும் பாய், ரகுமான் மற்றும் டேனி ஆகியோரை 'கைது செய்ய முழு மூச்சாக செயல்படுகிறார் சூர்யா. இதில் அவர் வெற்றி பெற்றாரா? ஹன்சிகா மோத்வானியின் காதல் என்ன ஆனது? அனுஷ்காவை திருமணம் செய்தாரா? என்பது மீதிக்கதை. சூர்யா காக்கி உடையில் மிடுக்காய் வலம் வருகிறார். இவர் பேசும் வசனங்கள் திரையில் பளிச்சிடுகிறது. குறிப்பாக எதிரிகளின் முன்னின்று அவர்களுக்கு சவால் விடும்போது தீப்பொறி கிளம்பும் வசனங்கள். சண்டைக்காட்சியில் திரையே அதிர்கிறது. ஹன்சிகா மோத்வானி பள்ளி சீருடையிலும் பளிச்சினு இருக்கிறார். இவரின் கதாபாத்திரத்தை திறம்பட செய்திருக்கிறார். படத்தில் சுடிதாருடன் காட்சி அளிக்கும் அனுஷ்கா, பாடல் காட்சிகளில் தாராளமாக கவர்ச்சி காட்டி ரகிகர்களை கிறங்கடித்திருக்கிறார். சந்தானம் வரும் காட்சிகள் அனைத்தும் படம் பார்க்கும் அனைவரையும் கலகலப்பில் ஆழ்த்துகிறது, விவேக், நாசர், மன்சூர்அலிகான், ராதாரவி, ரகுமான், டேனி, மனோரமா ஆகியோர் அவர்களது கதாபாத்திரத்தை திறம்பட செய்திருக்கிறார்கள். தேவி ஸ்ரீபிரசாத் இசையில் பாடல்கள் கேட்கும் ரகம். சூர்யாவை படம் முழுக்க டென்ஷனாகவே காட்டியிருக்கிறார் இயக்குனர் ஹரி. சூர்யாவின் புன்சிரிப்பு படத்தில் மிகவும் குறைவு. வர்த்தகப் படங்களைத் தரும் ஹரி, சிங்கம் 2-ல் தனது பாணியை விட்டு சற்று விலகி இருப்பது படத்திற்கு சற்று பின்னடைவு.

மொத்தத்தில் சிங்கம் 2 - வர்த்தக வலு குறைவு

## "நயன்தாரைவைப்பிரிந்தது - கடவுள் எடுத்த முடிவு"

நயன்தாராவும், பிரபு தேவாவும் காதலித்து திருமணம் வரை வந்த பிறகு பிரிந்து விட்டனர். முறிவுக்கான காரணம் பற்ற இதுவரை இருவரும் பேசவில்லை. முதல் தடவையாக பிரபுதேவா தற்போது பிரிவு பற்றி கருத்து தெரிவித்து உள்ளார் இதுகுறித்து ஐதராபாத்தில் பிரபுதேவா அளித்துள்ள பேட்டி விவரம் வருமாறு:-



கேள்வி:- மனைவி ரம்லத்தை விவகாரத்த செய்து விட்டீர்கள். இப்போத அவருடனான உறவு எப்படி இருக்கிறது?

அதுபற்றி பேச விரும்பவில்லை. எனது குழந்தைகளுடன் நான் தொடர்பில் இருக்கிறேன்.

கேள்வி:- மகன் இறந்ததால்தான் ரம்லத்துடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டதா?

என் மகன் மரணம் அடைந்தது கோரமான இழப்பு. வேறு விஷயங்கள் பற்றி சொல்ல விருப்பம் இல்லை. மற்ற இரு மகன்களையும் அடிக்கடி சந்திக்கிறேன். சூட்டிங் இல்லாதபோது மும்பைக்கு அழைத்து வந்து என்னுடன் வைத்துக் கொள்கிறேன். வெளிநாடுகளுக்கும் அழைத்து போனேன்.

கேள்வி:- நயன்தாராவும் நீங்களும் காதலித்தீர்கள் முதலில் காதலை சொன்னது யார்?

அதுபற்றி இப்போது பேசுவது தேவை இல்லாத விஷயம்.

கேள்வி:- நயன்தாராவுடனான காதல் முறிந்ததற்கு என்ன காரணம்?

அது கடவுள் எடுத்த முடிவு. நாம் நினைத்த காரியம் நடந்து விட்டால் சந்தோஷப்படுவோம். இஷ்டப்பட்ட காரியம் நடக்காமல் போனால் கடவுள் முடிவு என்று அவரிடம் விட்டு விடுவோம். இது கடவுள் எடுத்த முடிவு. காரணம் கடவுளை நான் நம்புகிறேன். நடந்தவை எல்லாம் சரிதான். அதைபற்றி நினைப்பதில் அர்த்தம் இல்லை.

கேள்வி:- மீண்டும் திருமணம் செய்து கொள்வீர்களா?

என்னை சந்திப்பவர்க ளெல்லாம் எப்போது திருமணம் செய்து கொள்வீர்கள் என்றுதான் கேட்கிறார்கள். என் மீதுள்ள அக்கறையில் கேட்பதாகவே உணர்கிறேன். இப்போது என் சிந்தனை தொழிலில்தான் உள்ளது. தினமும் மணிக்கணக்கில் வேலை பார்க்கிறேன்.

கேள்வி:- இப்போதைய மனநிலையில் காதல் பற்றி உங்கள் கருத்து என்ன?

காதலை மதிக்கிறேன். திருமணம் மீது மரியாதை இருக்கிறது.

இவ்வாறு பிரபுதேவா கூறினார்.

## இசையமைப்பாளராக அறிமுகமாகிறார் சிம்புவின் தம்பி

நடிகர் சிம்புவின் தம்பி குறளரசன் சினிமா இசையமைப்பாளராகியுள்ளார். பாண்டிராஜ் இயக்கும் புது படத்தை சிம்பு சினி ஆர்ட்ஸ் என்ற பெயரில் சிம்புவே தயாரிக்கிறார். காதல் கதையாக தயாராகும் இப்படத்தில் சிம்பு நாயகனாக நடிக்கிறார். நாயகியாக முன்னணி நடிகை நடிக்கிறார்.

இந்த படத்தில்தான் குறளரசனுக்கு இசையமைப்பாளர் வாய்ப்பு கிட்டியுள்ளது. குறளரசனின் மெட்டுக்களை கேட்டு வியப்பாகி இப்படத்துக்கு இசையமைக்க வைத்துள்ளதாக படக்குழுவினர் தெரிவித்தனர். சிம்பு தற்போது லண்டனில் வி.டி.வி. கணேஷ், மீரா ஜாஸ்மின் நடிக்கும் "இங்க என்ன செல்லுது" என்ற படத்தின் பாடல் பதிவில் பங்கேற்று உள்ளார். எதிர்வரும் பத்தொன்பதாம் திகதி திகதி அவர் சென்னை திரும்புகிறார்.

அதன் பிறகு இப்படத்துக்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகிறது.

## "எமிஜக்கூஷன் விபத்து"



ஆர்யாவுடன் "மதராச பட்டணம்" படத்தில் கதாநாயகியாக நடித்தவர் எமிஜாக்சன், விக்ரமுடன் "தாண்டவம்" படத்திலும் நடித்தார்.

தற்போது ஷங்கர் இயக்கத்தில் விக்ரம் நடிக்கும் "ஐ" படத்திலும் நடித்து வருகிறார். தெலுங்கு படத்திலும் நடிக்கிறார். தெலுங்கில் ராம்சரன், ஸ்ருதிஹாசன் ஜோடியாக நடிக்கும் "யவடு" படத்தில் எமி ஜாக்சன் இரண்டாவது நாயகியாக நடிக்கிறார். இதன் படிப்பிடிப்பு லண்டனில் நடந்தது. எமிஜாக்சன் காரில் பயணம் செய்வது போன்ற காட்சியொன்றை படமாக்கினர். காரை டிரைவர் வேகமாக ஓட்டினார். அப்போது அந்த கார் எதிர்பாராதவிதமாக எதிரே வந்த இன்னொரு காருடன் பயங்கரமாக மோதியது. இதில் காருக்குள் இருந்த எமிஜாக்சனுக்கு பலத்த அடிபட்டது. உடலில் ரத்தக்காயங்கள் ஏற்பட்டன. படப்பிடிப்பு குழுவினர் விரைந்து சென்று எமி ஜாக்சனை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேஸ்புக்கின் புதிய வசதி – சப்ஸ்கிறைபர்

பேஸ்புக் நிறுவனம் தனது உறுப்பினர்களைத் தக்க வைக்க புத்தம் புதிய வசதிகளை அறிமுகப்படுத்திக் கொண்டே இருக்கிறது. நாம் இப்போது பார்க்கப் போவது Subscribe வசதியைப் பற்றி. Subscribe என்றால் குறிப்பிட்ட நண்பர்கள் நமக்குப் பிடித்திருந்தால் நாம் அவர்களுக்கு நண்பராகச் சேரப்போவது இல்லை. அவர்களது Public செய்திகள் Updates மட்டும் நமக்குத் தெரிந்தால் போதும். இதனால் Friend Request கொடுத்து தொல்லை செய்யத் தேவையில்லை. Subscribe செய்வதன் மூலம் அவர்களின் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும். பிரபலமானவர்கள், சினிமா நட்சத்திரங்கள் போன்ற உங்களுக்குத் தெரியாத நபர்களின் ரினயவநளகளை நாமும் பெற இந்த வசதி உதவுகிறது. இதற்கு அவர்களின் Timeline பக்கத்தில் சென்று Subscribe செய்தால் போதுமானது. இந்த வசதி Twitter இன் Following வசதி மற்றும் கூகிள் பிளஸின் Add to circles வசதியை ஒத்ததாக எடுத்துக் கொள்ளலாம். இதில் அவர்கள் Public என்று வெளியிடுகிற செய்திகளை மட்டுமே பார்த்துக் கொள்ள முடியும். அந்தரங்க தகவல்களை அறிய வேண்டுமானால் சற்று முயற்சி செய்து நண்பரானால் தான் உண்டு. சரி இந்த வசதியை நமது Timelineக்கு Activate செய்வது எப்படி என்று பார்ப்போம். கீழுள்ள சுட்டியைக் கிளிக் செய்து பேஸ்புக்கின் சப்ஸ்கிரைப் பக்கத்திற்கு சென்று அதில் Allow Subscribers என்ற Button Click செய்யுங்கள் http://www.facebook.com/about/subscriptions

அடுத்து Subscribe Settings பக்கம் வரும். இதில் மூன்று அமைப்புகள் உள்ளன.

1.யாரெல்லாம் உங்கள் செய்திக்கு கருத்துக்கள் போடலாம் என்பது.

2.யாருடைய activityகள் எல்லாம் உங்களுக்குத் தெரிவிப்பது என்பது

3.நண்பர்களுடைய நண்பர்கள் அதிகமாக நமக்கு Friend Request கொடுக்காமலிருக்க வழி செய்தல

மேற்கண்ட அமைப்புகளை அமைத்து விட்டு ழுழு Button ஐ Click செய்தால் உங்களுக்கான Subscribe வசதி Activate செய்யப்படும். இதன் பின் உங்கள் செய்திகளைப் பின் தொடர நினைக்கும் நண்பர்கள் Subscribe Button ஐ ஊடளைஉம செய்து கொண்டால் நீங்கள் Public காக வெளியிடும் செய்திகள் அவர்களுக்கு சென்று சேரும். அடுத்து நாம் அடுத்தவரின் Subscribe வசதியைக் Click செய்து சேரும் போதே எந்த மாதிரியான Updatesகள் மட்டுமே வேண்டும் என முடிவு செய்து கொள்ளலாம். All Updates, Most Updates, Only Important போன்ற வகைகளில் எதேனும் ஒன்றை தேர்வு செய்யலாம். அதே போல Update செய்யப்படும் செய்திகளைப் பொறுத்து பேஸ்புக் வகைப்படுத்தியிருக்கிறது. Status, Photos, Comments, Activities, Likes போன்றவற்றில் வேண்டாதவற்றைத் தவிர்க்கலாம். அல்லது உங்களுக்குப் பிடித்தமானவற்றை வைத்துக் கொள்ளலாம். இந்த மாதிரி Subscribe Option களை விரும்பியவாறு தேர்வு செய்து கொள்வதன் மூலம் அடுத்தவர்களின் அத்தனை செய்திகளும் வராமல் கட்டுப்படுத்தலாம். பிடிக்கவில்லை என்றால் Unsubscribe செய்து கொள்ளுங்கள்.










## குழந்தை வேண்டும்



ஸ்ருதி என்றாலே சர்ச்சை என்னும் அளவு அவரது பேட்டிகள் அமைந்து விடுகிறது. தற்போது தனது திருமணம் குறித்து அவர் அளித்த பேட்டியில்... என திருமணம் எப்போது என்று தெரியவில்லை. எனது சுதந்திரத்தை யாருக் காவும் இழக்க விரும்ப வில்லை. என்னை என் போக்கில் விடும் கணவன் தேவை, அப்படி ஒரு மனிதர் கிடைப்பாரா என்பது சந்தேகம் தான். உறவு என்ற பெயரில் எனது சுதந்திரத்தை களவாடிவிடக் கூடாது. இதில் இரண்டாவது என்ற கருத்துக்கே இடமில்லை. எனக்கு திருமணத்திலோ, கேர்ள் பிரண்ட் போன்ற உறவுகளிலோ நம்பிக்கையில்லை. ஆனால் குழந்தைகள் என்றால் எனக்கு ரொம்ப பிடிக்கும், குழந்தை பெற்றுக் கொள்ள ஆசையாக உள்ளது என அதிரடியாக பேட்டி அளித்துள்ளார்.




எனினும் ஒருவனுக்கு மட்டும் மனம் உறுத்திக் கொண்டேயிருந்தது......

அவன் கேதீஸின் தமையன். தனது தம்பி கொலையாகிக் கிடந்த கோலத்தைப் பார்த்தவுடன் சுயநினைவை இழந்த அவனின் உள்ளுணர்வு அவனை கொலை செய்தவர்களுக்கு உடந்தையாக இருப்பவர் யாரென நச்சரிக்கத் தொடங்கியிருந்தது. அவன் சுயநினைவைப் பெற்ற உடன் அப்பெயரைச் சொல்லிக் கோவெனக் கதறியழுதிருந்தான். எனினும் தேற்றும் சாக்கில் அவனுக்கருகிற் சென்ற உறவினர் ஒருவர் அவ்வாறு கதறியழ வேண்டாம் என அன்புடன் கடிந்துகொண்டதை அடுத்து அவன் தன் புலனுணர்வை வெளிச் சொல்லாமல் இருந்தான்.

விடிந்திருந்தது. அன்று 19ம் திகதி சித்திரை மாதம் 2012ம் ஆண்டு. அதிகாலையிலேயே கொலை நடந்த இடத்தை இரண்டு வலயமாக காவல்துறையினர் பிரித்துக் கொண்டனர். முதலாவது வலயம் கேதீஸ் கொல்லப்பட்டுக் கிடந்த பகுதி. இரண்டாவது வலயம் மோட்டார் சைக்கிள் விழுந்து கிடந்த பகுதி. மோட்டார் சைக்கிள் விழுந்து கிடந்த பகுதி முழுவதும் சல்லடையாகத் தேடிய பின்னர் மோட்டார் சைக்கிளை ஒரு பக்கச் சுவருக்குத் தள்ளி நிறுத்திய பின்னர் கொலை நடந்த இடத்திலிருந்த இரத்த மாதிரிகளை தடயவியல் புலனாய்வுப் பிரிவினர் சேகரிக்கத் தொடங்கினர்.

பருத்தி மொட்டு வடிவில் செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட காதைச் சுத்தப்படுத்தும் தண்டைக் கொண்டு இரத்த மாதிரிகளை அவர்கள் சேகரித்து பத்திரப்படுத்திக் கொண்டனர். மேலும் ஏனைய நிலப்பகுதிகள் யாவற்றையும் சல்லடையிட்டுத் தேடிய அவர்களுக்காக மேலும் ஒரு தடயம் அருகிலுள்ள காணிக்குள் காத்துக் கிடந்தன. அவை கொலையாளிகள் புகைத்திருந்த வெண்சுருட்டுக்களின் அடிக் கட்டைகள். அவற்றையும் பத்திரப்படுத்திக் கொண்ட அவர்கள் தற்போது மோப்ப நாயின் உதவியை நாடியிருந்தனர்.

காலை 8.30 மணியளவில் மோப்ப நாய் அவ்விடத்திற்கு வரவழைக்கப்பட்டிருந்தது. கையுறையின் கிழிந்த துண்டொன்றைத் தடயமாக நேற்றைய இரவில் பத்திரப்படுத்தியிருந்த காவல்துறையினர் அதனைப் பொலித்தீன் பையிலிருந்து எடுத்து நாயிடம் முகரக் கொடுத்தனர். நாய் அதனை முகர்ந்த பின் முதலில் கேதீஸின் மனைவியின் வீட்டினுள் நுழைந்தது. பின் வாசல் வரை சென்ற அந் நாய் பின்னர் முன்வாசல் வழியாக வெளிப்புறம் வந்து மீண்டும் கொல்லைப் புறத்திற்குத் தாவி ஓடியது. கொலைஞர்கள் அவ் வீட்டிலேயே காத்திருந்தார்களோ?......................

அவ்வாறு நாய் வீட்டின் கொல்லைப் புறத்திற்கு ஓடிச் சென்றதற்குக் காரணம் யாதெனில் கொலை செய்யப்படமுதல் கேதிர் அவ்விடத்தில் இருந்தே உணவருந்தியிருந்தான் என்பதால் தான். ஆக கொலைஞனின் கையுறையில் இருந்து மோப்ப நாய் முகர்ந்திருந்த வாசம் கொலைஞனினதும் கேதிஸினதும் தான். ஏனெனில் கிழிந்து விழுந்திருந்த அக் கையுறையை அணிந்திருந்த கொலைஞனின் கையை கேதீஸ் கடித்த போதே அக் கையுறை கிழிந்திருக்க வேண்டும். அதனால் மோப்ப நாயின் புலனில் இரு வேறுபட்ட வாசங்கள் பதிவாகிவிட்டன.

வீட்டின் கோடிவரை ஓடிச்சென்ற அந்த நாய் பின்னர் பிரதான வாசல் ஊடாக ஓடிச் சென்று குச்சொழுங்கையின் ஊடாக கேதீஸ் மரணித்துக் கிடந்த, காவல்துறையால் முதலாம் எண்ணிடப்பட்டிருந்த பிரதேசத்தில் சிறிது நேரம் தரித்து நின்றது. பின்னர் அவ் வழியின் பிரதான படலைக்கு நேர் எதிராக இருந்த மதில் கரை வரை வென்று அம் மதற் சுவரைப் பிராண்டத் தொடங்கியது. கொலைஞன் ஒருவன் தாவிச் சென்ற சுவர் அதுவென உடனேயே புரிந்து கொண்ட காவல் துறையினர் அம் மதிற்சுவரை அங்குலம் அங்குலமாக ஆராயத் தொடங்கினர்.

அம் மதிற் சுவரிலும் இரத்தக் கறையொன்றைக் கண்டுகொண்டனர் அவர்கள். அக் கறையினை சுரண்டி பத்திரப்படுத்திக் கொண்டனர்.

சர்வதேச அழுத்தங்களைக் கொண்டு வந்த கொலையொன்றாகிப் போனது இக் கொலை. எனவே வேகமாகக் கொலையாளியைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதற்கென மூன்று பிரிவுகள் உருவாக்கப்பட்டன. இரண்டு பிரிவுகள் வெளிப்படையாகத் தொழிற்படத் தொடங்க முக்கிய புலனாய்வுப் பிரவொன்று சந்தடியின்றித் தொழிற்படத் தொடங்கியிருந்தது.

காவல்துறையினருக்கு இருந்த மிகப் பெரிய சவால் இக் கொலைக்கான சாட்சியங்கள் எவையுமின்றி இருந்ததே. சாட்சியங்கள் இருக்குமாயின் வழக்குகளில் ' . உண்மைக் குற்றவாளிகளை இனங்காண்பது இலகுவாக இருப்பதுடன் அதனைத் தொடர்ந்து அவர்களை விசாரணை செய்தே தடயங்களைக் கண்டுபிடித்துச் சாட்சியங்களையும் தடயங்களையும் இணைத்து குற்றத்தை ஆதாரபூர்வமாக நிரூபித்து விடமுடியும். ஆனால் இக் கொலைவழக்கு முழுக்க முழுக்க தடயங்களைக் கொண்டே முன்னெடுக்கப்பட வேண்டியிருந்தது.

தடயங்களைக் கொண்டு புலனாய்வொன்றை முன்னெடுக்கும்



போது மூன்று தடைகளை புலனாய்வாளர்கள் எதிர் கொள்வர்.

முதலாவதாக முக்கிய தடயங்களைக் குற்றவாளிகள் தாமே அழித்து விட்டுச் சென்று விடுவர். இரண்டாவது முக்கிய தடயங்களை விட்டுவிட்டுச் செல்லாமல் இருப்பது. மூன்றாவது அவ்வாறான முக்கிய தடயங்கள் ஏதும் விட்டுவிட்டுச் சென்று அவற்றைப் புலனாய்வாளர்கள் கண்டுபிடித்துவிட்டார்கள் என்பதை அறிந்தால் அத் தடயத்தை வலிதற்றதாக்கும் முயற்சியில் கொலையாளிகள் இறங்கி விடுதல் ஆகிய மூன்று தடைகளுமே குற்றமொன்றில் தடயங்களைக் கொண்டு ஆய்வு மேற்கொள்ள முயற்சிக்கும் போது ஆய்வாளர்கள் எதிர்கொள்ளும் தடைகளாக இருக்கும்.

எனினும் இக் கொலையில் குற்றவாளிகளுக்குத் தடயங்களை அழித்துவிட்டுச் செல்லும் வாய்ப்பை இருட்டு வழங்கவில்லை. வெளிச்சமொன்றை ஏற்றித் தடயங்களை அழிக்கும் முயற்சியைக் கொலையாளிகள் இங்கு மேற்கொள்ளவில்லை. ஏனெனில் வெளிச்சமேற்றப்பட்டால் தற்செயலாக அவ்வழியே வரும் எவராவது ஒருவர் கொலையாளிகளை அவதானித்து விடும் வாய்ப்புக்கள் உருவாகிவிடும் என்பதே.

இரண்டாவது இக் கொலையில் தற்போது வரை பெற்றுக்கொள்ளப்பட்ட தடயங்களாக இரத்த மாதிரிகளும், கையுறையும், உந்துருளிக் கண்ணாடித் தொடுப்பில் இருந்த கை அடையாளங்களும் கைத்தொலைபேசியொன்றின் மீள் நிரப்பு அட்டையுமே. இவை முக்கியமான தடயங்களாக உருவாகுமா என்பது இன்னும் புலனாகாத நிலையில்.....

இக்கொலைக் குற்றத்தை விசாரிக்கும் தந்திரோபாயத் திட்டம் உருவாக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## முத்தரப்பு ஒரு நாள் போட்டி - இந்தியா வெற்றி

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று முடிந்த முத்தரப்பு ஒருநாள் போட்டிகளில் இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டியின் இறுதிப் போட்டியில் இலங்கையை எதிர்த்தாடிய இந்தியா போட்டி முடிவடைய 2 பந்துகள் மீதமிருக்க கைவசம் 1 இலக்கினைக் கொண்டிருந்த போது வெற்றிக்குத் தேவையான ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

நாணயச் சுழற்சியில் வென்ற மகேந்திரசிங்தோனி இலங்கையைத் துடுப்பெடுத்தாடப் பணித்தார். அதன்படி இலங்கை சகல இலக்குகளையும் இழந்து 48.5 பந்துப் பரிமாற்றங்களில் 201 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

ட்ரினிடாட் மைதானம் பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமானபடியால் இவ்வோட்ட எண்ணிக்கை வெற்றிக்குப் போதுமானதாகவே இருந்தது. அதனை நிரூபிக்கும் முகமாக பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி கடைசி பந்துப்பரிமாற்றம் வரை இலங்கை அணியின் உக்கிர தாக்கதலைச் சமாளிக்க வேண்டியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

இந்திய தலைவரின் வீழத்தப்பட முடியா இலக்கும் வேகமான ஓட்டக் குவிப்பும் இந்திய வெற்றிக்கு வழிவகுத்தது. எதிர்புறத்தில் இலக்குகள் சரிந்து கொண்டருக்க தனது பக்கத்தில் சிறந்த விளையாட்டை வெளிப்படுத்திய மகேந்திரசிங்தோனி 52 பந்துகளை எதிர்கொண்டு 45 ஓட்டங்களைப் பெற்றார். இலங்கையின் பந்து வீச்சில் ரங்கன ஹேரத் 10 பந்துப் பரிமாற்றங்களில் 20 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளை வீழ்த்தினார். 42 ஓட்டங்களுக்குள் 6 இலக்குகள் இலங்கைப் பந்துவீச்சாளர்களால் வீழ்த்தப்பட்டபோது தடுமாறிய இந்தியா சிறப்பாக தனது இறுதிக் கட்ட விளையாட்டை ஆடி போட்டியை வெற்றி கொண்டது.

## உசேன்போல்ட் விடுத்த எச்சரிக்கை 19.73 செக்கன்




பாரிஸ் டயமன்ட் லீக் தடகள போட்டி பிரான்சில் நடந்தது. இதில் ஆண்களுக்கான 200 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் உலக மற்றும் ஒலிம்பிக் சாம்பியனான ஜமைக்காவின் உசேன்போல்ட் 19.73 செக்கனில் பந்தய தூரத்தை கடந்து தங்கப்பதக்கத்தை தனதாக்கினார். மற்றொரு ஜமைக்கா வீரர் வாரென் வெய்ர் 19.92 செக்கனில் கடந்து 2-வதாகவும், பிரான்ஸ் வீரர் கிறிஸ்டோப் லீமாய்ட்ரே 20.07 செக்கனில் 3-வதாகவும் வந்தனர். உலக தடகள போட்டி அடுத்த மாதம் மாஸ்கோவில் நடைபெற இருக்கும் நிலையில் சக எதிராளிகளுக்கு எச்சரிக்கை விடுப்பது போல், உசேன் போல்ட்டின் இந்த மின்னல் வேக ஓட்டம் அமைந்துள்ளது.

## "மாகாணப்பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி"

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 18வது விளையாட்டு போட்டி கடந்த சனிக்கிழமை கிழக்கு பல்கலைக்கழக மைதானத்தில் ஆரம்பமானது. நான்கு தினங்கள் நடைபெற்ற இவ்விளையாட்டு போட்டியில் 17கல்வி வலயங்களில் இருந்து மாணவர்கள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. 18வது விளையாட்டு போட்டியின் ஆரம்ப நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஏ.ஏ.புஸ்பகுமார் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். அனைத்து போட்டிகளின் முடிவில் ஆண்கள் பிரிவில் கல்முனை வலயம் 96.3 புள்ளிகளைப் பெற்று முதல் நிலையினையும், கிண்ணியா வலயம் 78 புள்ளிகள் பெற்று இரண்டாம் நிலையினையும், திருகோணமலை வலயம் 38 புள்ளிகள் பெற்று ஏழாவது நிலையினையும் பெற்றுள்ளது. பெண்களுக்கான பிரிவில் அம்பாறை வலயம் 149 புள்ளிகள் பெற்று முதல் நிலையினையும், பட்டிருப்பு வலயம் 141 புள்ளிகள் பெற்று இரண்டாவது நிலையினையும், திருகோணமலை வலயம் பதினைந்தாவது நிலையினையும், பெற்றுள்ளது. ஆண்கள் பெண்கள் பிரிவில் இணைந்து அம்பாறை 183 புள்ளிகள் பெற்று முதல் நிலையினையும், பட்டடிருப்பு வலயம் 141 புள்ளிகள் பெற்று இரண்டாவது நிலையினையும், திருகோணமலை வலயம் பெற்று 43 புள்ளிகள் பெற்று பதினோராவது நிலையினையும் அடைந்துள்ளது





# நிறைவுறும் வருடமொன்றின் நினைவுகள் - 1

## "மலைமுரசின் ஓராண்டுப் பயணம்"

- ஆசிரியர் -

**ஜுலை** மாதம் 2012ம் வருடம் 3வது வார ஆரம்பத் தின மொன்றின் இரவில் நானும் எஸ் எஸ் டிஜிட்டல்ஸ் நிறுவன இளைஞர்கள் அர்ஜுன் மற்றும் லக்ஸ்மன் ஆகியோருடன் பவித்ரனும் கூடிப் பேசிக் கொண்டு இருந்தோம். அன்றென் எண்ணத்தில் உதிர்த்த ஒரு வடிவமே திருகோணமலைக்கான பத்திரிகை.

நாம் நால்வரும் வேறு எதைப்பற்றியோ பேசிக் கொண்டிருந்தோம். ஆனால் என் எண்ணம் எல்லாம் நிறைந்திருந்தது ஒரு பத்திரிகையே...

மறுநாள் இரவு நான் எனது வீட்டின் முன்றலில் அர்ஜுனை அழைத்து பத்திரிகை சம்பந்தமாகவும் அதற்கு தேவையான பண முதலீடு தொடர்பாகவும் பேசினேன். அவரால் அப்போது அவ்விடயத்தில் உதவ முடியவில்லை. அடுத்து நான் பவித்ரனுடன் பேசிப்பார்த்தேன். அவர் அதற்கு உடன்பட்டார்.

அன்று ஜுலை 20ம் திகதி எஸ் எஸ் டிஜிட்டல்ஸ் நிறுவனத்தில் இரவு வேளை அமர்ந்திருந்து உரையாடிக் கொண்டிருந்தோம். திடீரென மூவரில் யாரோ ஒருவர் என்னிடம் கேட்டார், எப்போது பத்திரிகை வெளிவருகின்றது? என....

நான் சிறிது நேர மௌனத்தின் பின் பதிலளித்தேன். அந்தப் பதிலின் திகதி 29.07.2012.

ஒன்பது நாட்களில் ஒரு மாவட்டத்திற்கான பத்திரிகையை வடிவமைப்பது சாத்தியமா? என்ற கேள்வி எனக்கு எப்போதுமே எழவில்லை.

ஜுலை 22ம் திகதி திருகோணமலை மாவட்டப் பத்திரிகையாளர்களுடன் சந்திப் பொன்றை ஏற்படுத்துமாறு பவித்ரனுக்கு கட்டளையிட்டுவிட்டு பத்திரிகைக்கான பெயர் எதனை வைக்கலாம் என சிந்தித்தவாறே வீடு நோக்கிப் பயணித்தேன்.

வீடு வந்து சேர்ந்த போது என் எண்ண ஓட்டத்தில் எஞ்சிக் கிடந்தன ஐந்து எழுத்துக்கள். "மலைமுரசு"..

எனது பத்திரிகையின் பெயர் மலைமுரசு என்ற முடிவை அக்கணமே நான் எடுத்திருந்தேன். அடுத்த நாள் இரவில் மலைமுரசின் முகப்பு இலச்சனையை நானும் அர்ஜுனும் வடிவமைக்கத் தொடங்கினோம். முரசம் கொட்டும் வீரனின் படம் வலைத் தளத்திலிருந்து வீழ்ந்தது.

பின் பெயரைச் சுட்டும் எழுத்து வடிவத்தை தானே அர்ஜுன் தெரிவு செய்தார். நான் எழுதுகோல் ஒன்றை அவ்வடிவத்தில் இணைக்க விரும்பினேன். எழுதுகோலின் நுனி மேல் நோக்கியா? [illegible] வேண்டும் [illegible] அக்கோல் மலைமுரசில் சமாந்தரமாக இருக்கட்டும் என்றே எண்ணினேன்.

ஏனெனில் மலைமுரசின் எழுதுகோள் யாவரையும் சமனாகவும், அனைத்தையும் ஒரே கண்ணைக் கொண்டும் பார்க்க வேண்டும் என்ற என் எண்ணத்தினால் அவ் எழுதுகோள் சமாந்தரமாக மலைமுரசின் இலச்சனையில் வரையப்பட்டது.

அக்கோலில் இருந்து இரண்டு மையைச் சொட்டுக்களை விழுத்தச் சொன்னேன். அவை எமது இனத்தில் பத்திரிகையாளர்களாக எழுதுகோளைத் தூக்கி உயிரிழந்தவர்களையும் மற்றையது காணாமற்போனவர்களையும் நினைவு கூர்வதற்காக என முடிவெடுத்தேன்.

மலைமுரசு®

மலைமுரசின் முதலாவது இலச்சனை இவ்வண்ணமே உருவானது.

முதலாவது இலச்சனையை அச்சுப் பதிவு செய்து முடித்த போது நேரம் இரவு 1 மணியாயிருந்தது. அந்நேரத்தில் வீடு திரும்பிய உடன் நித்திரையிலிருந்த மனைவியை எழுப்பி அந்த இலச்சனையைக் காட்டி "இது தான் எனது பத்திரிகையின் இலச்சனை" என்றேன். விசித்திரமாக என்னையும் அந்த இலச்சனையையும் மாறி மாறிப் பார்த்த அவர், "நல்லா இருக்கு" என்ற வார்த்தையின் பின் துாங்கப் போய்விட்டார். என்னால் துாங்க முடியவில்லை...

மறுநாள் பத்திரிகையை அச்சுப்பதிக்கும் வேலைகள் தொடர்பாக அச்சகங்களுடன் பேச வேண்டியிருந்தது.

ஏனைய எல்லா மாவட்டங்களிலும் இருக்கும் அச்சக வசதி திருகோணமலையில் இல்லாமலிருந்தது அப்போது தான் என்னைச் சுட்டது.

எனினும் திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் சென்று அங்கு அச்சுப் பதிப்புப் பணியை வியாபாரமாக கொண்டுள்ள "அஞ்சனம் பிரின்டர்ஸ்" உடன் எஸ் எஸ் டிஜிட்டல்ஸ் தொடர்பினை ஏற்படுத்தியிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் படுகொலை . . .

விசேட அதிரடிப்படையினருமே காரணம் எனக் கடும் கோசங்களை எழுப்பியிருந்தனர்.
இதனைத் தொடர்ந்து கடந்த ஏழு வருடகாலமாகக் கடுமையான சாவதேச அழுத்தங்களை எதிர்கொண்ட இலங்கை அரசு தற்போது இக் கொலைகள் தொடர்பான நீதி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதுடன் இக் கொலை மனோகரன் ரஜீகர், யோகராஜா ஹேமச்சந்ரா, லோஸிதராஜன் றொகான், தங்கத்துறை சிவநாதா மற்றும் சண்முகராஸா கஜேந்திரன் ஆகிய ஐந்து இந்துக் கல்லூரி மாணவர்களுமே சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர்.

அத்திகதியில் அதிரடிப்படைப் பிரிவிற்குப் பொறுப்பாக திருகோணமலையில் நிலைப்படுத்தப் பட்டிருந்த பேசிய போது சனாதிபதி ஆலோசகர் "விசேட அதிரடிப்படையினரே இக் கொலைகளைச் செய்துள்ளனர் " எனத் தெரிவித்ததாக அப்போதைய அமெரிக்க தூதர் றொபட் பிளேக் அமெரிக்க இராசாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பிய வடத் தொடர்பாடலில் தெரிவிக்கப்பட்டிருந்ததை "விக்கிலீக்ஸ்" இணையத்தள விபரங்கள் வெளியிட்டிருந்தன.

அவ் வடத் தொடர்பாடலில் "அதிரடிப்படையினர் தான் இக் கொலைகளைச் செய்தார்கள் என்பது எமக்குத் தெரியும். ஆனால் அவர்களிடமிருந்த சுடுகலனோ அல்லது கொல்லப்பட்டவர்களிலிருந்த சன்னங்களோ அவர்களைக் குற்றவாளியாகக் காட்டவில்லை. எனவே அவர்கள் இவ்வாறான கொலைகளுக் கென்றே தனிணான சுடுகலன்களைக் கொண்டிருக்கின்றர்கள்" எனத் தெரிவித்திருந்தார் என இவ் வடத் தொடர்பாடல் மேல்நோக்கிச் செல்கின்றது.

22வது மனிதவுரிமைக் கூட்டத்தொடரில் மனிதவுரிமை ஆணையர் நவநீதம்பிள்ளை அவர்களால் இக் கொலைகளுக்காக "ரிங்கோ 5" என விசேட குழுஉக்குறி இடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விக்கிலீக்ஸ் இணையத்தள பிரிப்பு:
¶6. (C) Speaking with surprising candor, Rajapaksa explained the GSL's efforts to prove that members of the Security Task Force (STF) murdered five students in Trincomalee in January: "We know the STF did it, but the bullet and gun evidence shows that they did not. They must have separate guns when they want to kill some one. We need forensic experts.

தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள குற்றப்புலனாய்வுப் பிரிவிற்கு அனுமதியும் அளித்துள்ளது.

அதனையடுத்து ஆரம்பக்கட்ட விசாரணைகளின் பின்னர் கொலைச் சந்தேகநபர்களாக விசேட அதிரடிப்படையின் உதவிக் காவல்துறை அத்தியட்சகர் ஒருவர் உட்பட பன்னிரண்டு விசேட அதிரடிப்படையினர் கைதாகி கடந்தவாரம் திருகோணமலை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப் பட்டுள்ளனர்.

சிரேட்ட காவல்துறை அத்தியட்சகரே தற்போது புதிதாக பிரதிக் காவல் மா அதிபராகத் திருகோணமலைக்கு இடமாற்றப் பட்டிருக்கின்றார் என ஆங்கிலச் செய்தித்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. எனினும் இக்கெலைக் குற்றச்சாட்டுகளில் அவரது பெயர் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

இக் கொலைகள் தொடர்பாக 2006ம் ஆண்டில் ஒக்டோபர் 4ம் திகதி அமெரிக்கத் தூதர் இலங்கை சனாதிபதியின் அப்போதைய ஆலோசகரான பஷில் ராசபக்சவுடன்

## என்னைப் பலி வாங்கவே

அங்கு அவர் மேலும் உரையாற்றும் போது "நான் முதலைமைச்சராக இருந்த காலத்திலே சிறுபான்மை சமூகங்களை பாதிக்கின்ற வகையிலே அமையப்பெற்ற எந்தவொரு சட்ட மூலத்தையும் ஆதரிக்கவில்லை. கிழக்கு மாகாண சபையின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட அனைத்து சட்டமூலங்களையும் திருப்பி அனுப்பினோம்.

அப்படி இருந்தும் கிழக்கு மாகாண சபை கலைந்தவுடன் பழி தீர்ப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது கோட்பாட்டையும் மறந்து அதாவது இணைந்த வடகிழக்கு என்கின்ற அவர்களது தாரக மந்திரத்தையும் மறந்து நான் வெற்றி பெறக் கூடாது என்பதற்காக கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பு போட்டியிட்டது.

கிழக்கிற்கான முதலமைச்சர் யார் என்கின்ற பிரச்சினை எழுந்த பொழுது அதற்கு முற்றுப் புள்ளி வைத்தவர்களும் இந்த தமிழ் தேசிய கூட்டமைப்பினர்தான். மீண்டும் முதலமைச்சர் பதவி ஒரு தமிழனுக்கு அதுவும் எனக்கு கிடைத்துவிடும் என்பதற்காக தாங்கள் முஸ்லிம் காங்கிரசுக்கு முதலமைச்சர் பதவி தர தயாராக இருக்கின்றோம் என இரா.சம்பந்தன் அறிக்கை வெளியிட்டார்.

இதனால் தான் தமிழ் மக்களுக்கு கிடைக்க இருந்த முதலமைச்சர் பதவி எமது முஸ்லிம் சகோதரர்களுக்கு கிடைத்தது எனத் தெரிவித்தார்.

## வயதடையாப் ...

குமரக்கடவையைச் சேர்ந்த 20 வயாதான உக்குபண்டார வசந்த குமாரவே கைதாகித் தடுப்பிலிடப் பட்டுள்ளார்.

இவர் 16 வயதான பெண்ணொருவரை வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக கிடைத்த முறைப்பாட்டை அடுத்தே கைதானார்.

அனுராதபுரம் வைத்தியசாலையில் காவல்துறையினரால் அனுமதிக்கப்பட்ட அப்பெண்ணின் மீது மேற்கொள்ளப்பட்ட மருத்துவ விசாரணையிலும் வன்புணர்வு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அனுராதபுரம் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சம்மாந்துறை வைத்தியசாலையில் ...

மாகாணத்தில் நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும். மேலத்தேய நாடுகளில் குறிப்பாக சகல வசதிகளும் கொண்ட வைத்திய சாலைகளே இவ்வாறான சத்திர கிச்சைகளை செய்கின்றன. எனினும் பிரபல்யமான எமது நாட்டு வைத்தியசாலைகளில் தற்போது இவ்வாறான சத்திர சிகிச்சைகள் செய்யப்படுகின்றன.

ஆனால் வளப்பற்றாக்குறையுடன் சம்மாந்துறை அன்வர் இஸ்மாயில் ஞாபகார்த்த வைத்தியசாலையில் எம்மால் செய்யப்பட்ட இவ்வாறான சத்திர சிகிச்சை பெரும் பிரயத்தனமான நடவடிக்கையாகும். குறிப்பாக மூலநோய் உள்ளவர்களுக்கு அறுவை செய்யாமல் தன்னியக்க ஸ்டெப்ளர் மெசின் பயண்படுத்தப்பட்டு செய்வதனால் வலியோ அல்லது இதன் பின்னர் மீண்டும் மூலநோய் ஏற்படுவதற்கு வாய்ப்போ இல்லை என அவர் தெரிவித்தார்.

இச்சத்திர சிகிச்சைக்கு முழுமையாக மயக்கவோ, கூடுதலான நேரமோ தேவைப்படாது எனவும் தெரிவித்த சத்திர சிகிச்சை நிபுணர் இதன் நம்பகத் தன்மையை வெளிப்படுத்த சத்திர சிகிச்சை செய்த இடத்துக்கு ஊடகவியலாளர்களுக்கும் அனுமதி வழங்கினார். வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் வை.டி.எம். அஸீஸ் விசேடமாக இச்சத்திர சிகிச்சையை பார்வையிட்டார். இதே நேரம் மேலும் ஒருவருக்கு சிறுநீரக அறுவை சிகிச்சையும் அங்கு இடம் பெற்றது. சிறுநீரகத்தில் இருந்து மூன்று கற்கள் வெட்டி அகற்றப்பட்டன.

## மட்டு- வின்செண்ட் ...

இன ஐக்கியத்தினையும் இனங்களுக் கிடையிலான கலாசார விழுமியங் களையும் மாணவர்கள் மத்தியில் தெரியப்படுத்தும் வகையில் இந் நிகழ்வுகள் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தன. அதற்காக உணவுக் கண்காட்சியும் நடத்தப்பட்டதுடன் இக் கண்காட்சியில் மூவினங்களின் பாரம்பரிய உணவுகள் பார்வைக்காகவும் சுவைப்பதற்காகவும் வைக்கப்பட்டிருந்தன.

தொடர்ந்து பாடசாலையின் கேட்போர் கூடத்தில் மதர் ஸ்ரீலங்காவின் நிகழ்வுகள் இடம்பெற்றன. பாடசாலை அதிபர் திருமதி கனகசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு வலய கல்விப்பணிப்பாளர் திருமதி சுபா சக்கரவர்த்தி சிறப்பு அதிதியாக கலந்துகொண்டார். இந்த நிகழ்வில் பொலநறுவை மன்னம்பிட்டி சிங்கள மகா வித்தியாலயம் மற்றும் காத்தான்குடி அல் அமீன் வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்கள் கலந்துகொண்டனர். இன ஒற்றுமையை வெளிக்காட்டும் வகையில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் இந்த நிகழ்வை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளும் வழங்கிவைக்கப்பட்டன.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விமுரசு

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

### பாடம் - விஞ்ஞானம்

1. நியூட்டனின் மூன்றாம் இயக்கவிதிக்கு முரணானது எது?
    1. விண்வெளி ஓடங்கள் புறப்படுதல்
    2. மாடியிலிருந்து போடப்பட்ட பந்து நிலத்தில் பட்டு உயருதல்
    3. ஆற்றிலுள்ள படகிலிருந்து தரைக்கு பாயும் போது ஏற்படும் தாக்கம்
    4. வளிமண்டலத்திற்கு அப்பால் செய்மதிகளின் இயக்கம்
2. கிணற்றில் போடப்பட்ட கல்லொன்று அமிழ்வதற்கான காரணமாக இருக்கக் கூடியது?
    1. கல்லின் நிறைக்கு சமனான நிறையுள்ள நீரை இடம்பெயர்த்தல்
    2. கல்லினால் இடம்பெயர்க்கப்பட்ட நீரின் நிறை கல்லின் நிறையிலும் குறைவாயிருத்தல்.
    3. கல்லின் நிறை கல்லினால் இடம்பெயர்க்கப்பட்ட நீரின் நிறையிலும் குறைவாயிருத்தல்
    4. கல்லினால் இடம் பெயர்க்கப்பட்ட நீரின் நிறை கல்லின் நிறையிலும் அதிகமாயிருத்தல்.
3. 1கிலோ வாற்று மணி $(KWh)$ என்பது

    1. $3.6\times10^6 J$  2. $3600J$  3. $36000KJ$  4. $3.6KJ$
4. பின்வரும் தொடர்புகளில் தவறானது எது?

| எஞ்சின் வகை | அனுகூலம் | பிரதிகூலம் |
|---|---|---|
| 1. பெற்றோல் | திறன் அதிகம் | வளி மாசடையும் |
| 2. டீசல் | பெற்றோலை விட செலவு குறைவு | பாரம் கூடியது எஞ்சினுள் காபன் படிதல் அதிகம் |
| 3. பற்றரி | ஒலி, ஒளி மாசடைதல் குறைவு | கூடியளவு சக்தியைக் களஞ்சியப் படுத்த முடியாமை |
| 4. உடல் வலு | ஒலி, ஒளி மாசடைதல் மிகக் குறைவு | திறன் அதிகம் |

5. $3Kg$ நீரின் வெப்பக் கொள்ளளவை கணிக்குக. (நீரின் தன் வெப்ப கொள்ளளவு $4200JKg^{-1}K^{-1}$ )

    1. $2100JK^{-1}$  2. $126JK^{-1}$  3. $8900JK^{-1}$  4. $4.2JK^{-1}$
6. கொள்ளளவி ஒன்றின் கொள்ளளவத்தின் மீது செல்வாக்கு செலுத்தும் காரணிகள் எவை?
    அ. தகடுகளுக்கிடையிலான தூரம்
    ஆ. மின்னுழையப் பதார்த்தத்தின் தன்மை
    இ. தகடுகளின் பரப்பளவு
    1. அவும் ஆவும்  2. ஆவும் இயும்  3. அவும் இயும்
    4. அ, ஆ, இ மூன்றும்
7. வங்கிகளில் போலி நாணயத் தாள்களை கண்டுபிடிப்பதற்கு பயன்படுத்தப்படும் மின்காந்த அலை எது?
    1. $X$ கதிர்  2. $UV$ கதிர்  3. $IR$ கதிர்  4. $\gamma$ கதிர்
8. கப்பலிலிருந்து சோளர் கருவியின் மூலம் பிறப்பிக்கப்பட்ட ஒலி 0.4 செக்கன்களின் பின்னர் உணரப்பட்டதாயின் கடல் மட்டத்தில் இருந்து கடலின் அடித்தளத்தின் ஆழம் எவ்வளவு?
    1. 350m  2. 700m  3. 280m  4. 560m
9. தளவாடி ஒன்றின் முன் 70m தூரத்திலிருக்கும் சிறுவனின் விம்பம் ஆடியிலிருந்து 1.75m இருக்குமாறு அமைய வேண்டுமெனின், சிறுவன் அசைய வேண்டிய திசையும், பெறுமானத்தையும் சரியாகக் குறிப்பது?
    1. ஆடியை நோக்கி 4.75m  2. ஆடியை நோக்கி 5.25m
    3. ஆடிக்கு எதிர்த்திசையில் 1.75m
    4. ஆடிக்கு எதிர்த்திசையில் 4.75m
10. குவிவு வில்லையில் தோன்றும் விம்பத்தின் இயல்புகள் உண்மையானது, தலைகீழானது, உருப்பெருத்தது. இவ்வியல்புகள் தோன்றுவதற்கு பொருள் எங்கு இருந்திருக்க வேண்டும்?
    1. பொருள் $F-L$ இற்கிடையில் 2. பொருள் $2F-F$ இடையில்
    3. பொருள் $2F$ இற்கு அப்பால்  4. பொருள் $2F$ ல்
11. $17^o$ யில் குறிப்பிட்ட நிறையுள்ள வாயுவின் கனவளவு $500cm^3$. இவ்வாயுவினை $67^o$ இற்கு அதிகரிக்கும் போது அதன் புதிய கனவளவு எவ்வளவு?

    1. $\frac{500\times17}{67}cm^3$  2. $\frac{500\times290}{340}cm^3$  3. $\frac{500\times340}{290}cm^3$

    4. $\frac{290\times340}{500}cm^3$
12. நகப்பூச்சு அகற்றியாக பயன்படும் கரைப்பான் எது?
    1. நாற்குளோரோ எதலீன்  2. இரு குளோரோ எதேன்
    3. தெரப்பன் தைன்  4. எக்சேன்
13. $3moldm^{-3}$ செறிவுடைய $CO(NH_2)_2$ கரைசலில் $\frac{1}{4}dm^3$ கனவளவில் அடங்கியுள்ளது எனில் இக்கரைசலில் கரைந்துள்ள $CO(NH_2)_2$ ன் திணிவு எவ்வளவு?

    1. $27g$  2. $45g$  3. $75g$  4. $30g$
14. காபனிரு சல்பைட்டில் நன்கு கரையக்கூடியதும் மென் நீல நிறச் சுவாலையுடன் எரிய கூடியதும், சல்பூரிக்கமில தயாரிப்பிலும் பயன்படும் மூலகம் எது?

    1. $Mg$  2. $Na$  3. $P$  4. $S$
15. ஓடுகள் சுடப்படும் போது தோன்றும் சிவப்பு நிறத்திற்குக் காரணமான மூலகம் எது?

    1. $Si$  2. $Mg$  3. $Fe$  4. $Al$
16. நற் போசணையாக்கத்திற்கு காரணமான அங்கி எது?
    1. பங்கசு  2. வைரஸ்  3. அல்கா  4. புரட்டோ சோவி
17. நீரின் நிலையான வன்மைக்கு காரணமான கல்சியம், மக்னீசியத்தின் அயன்கள் எவை?
    1. இரு காபனேற்று  2. மங்கனேற்று  3. குளோரைட்டுக்கள்
    4. பொசுப்பேற்று
18. அருகில் காட்டப்பட்டுள்ள சாய்தளத்தின் திறன் எவ்வளவு?




    1. 100%  2. 125%  3. 150%  4. 200%

சென்ற வார விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. 1 | 6. 2 | 11. 3 | 16. 1 |
| 2 3 | 7. 2 | 12. 2 | 17. 2 |
| 3. 1 | 8. 3 | 13. 2 | 18. 2 |
| 4. 1 | 9. 4 | 14. 2 | 19. 2 |
| 5. 2 | 10. 4 | 15. 3 | 20. 2 |

கணித, விஞ்ஞான பரீட்சை வழிகாட்டல் ஆசிரியர் : குரு,
குரு கல்வி நிலையம், சாம்பல் தீவு, புளியன்குளம்

### பாடம் - கணிதம்

1. ரூபா 60000 பெறுமதியுள்ள சலவை இயந்திரம் ஒன்றை ஆரம்பத்தில் ரூபா 15000 செலுத்தி மிகுதியை ரூபா 3100 வீதம் 15 சமமாத கட்டணமாக செலுத்தியும் பெற்றுக் கொள்ளலாம்.
    1. மாத அலகுகளின் எண்ணிக்கை?
    2. செலுத்திய மொத்த வட்டி எவ்வளவு?
2. அருகில் காட்டப்பட்டுள்ள சதுர அடிக் கூம்பகத்தின் மொத்த மேற்பரப்பளவை
    1. a, b சார்பில் எடுத்துரைக்க
    2. a = 10cm, b = 7cm எனின், மொத்த மேற்பரப்பளவை காண்க.
3. அருகில் காட்டப்பட்ட உருவை பயன்படுத்தி $Sin\theta = Cos(90-\theta)$ எனக் காட்டுக.




4. ஒருவனது மாத வருமானத்தை வட்ட வரைபு காட்டுகின்றது.




    1. Aயிற்காக செலவு செய்யும் வட்டத் துண்டின் பருமன் எவ்வளவு?
    2. C யிற்கு செலவிடும் பணம் ரூபா 2400 எனின், அவரது மாத வருமானம் எவ்வளவு?
5. ரூபா 10 பங்குகளை ரூபா 12வீதம் வாங்குவதற்கு ரூபா 18000 தை ஒருவன் முதலீடு செய்கின்றான். கம்பனி வழங்கும் பங்கு இலாபம் ரூபா 1200 எனின்,
    1. அவன் வாங்கிய பங்குகளின் பெயர் மாத்திரப் பெறுமானம் எவ்வளவு?
    2. பங்கு இலாப வீதம் எவ்வளவு?
6.

| தண்டு | இலை |
|---|---|
| 0 | 2 7 8 |
| 1 | 1 2 3 5 |
| 2 | 3 3 6 7 |

    1. பரம்பலின் ஆகாரம் யாது?
    2. பரம்பலின் காலணை இடை வீச்சு யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிதம் தொடர்ச்சி

7. $x-\frac{1}{x} \Rightarrow y$ எனின், $x^2+\frac{1}{x^2}$ பெறுமானத்தை $y$ சார்பில் தருக.

8. $x^2$ .......... $+49y^2$ என்ற கோவையை
   1. நிறைவர்க்கமாக்குவதற்கு சேர்க்க வேண்டிய மாறா உறுப்பு?
   2. அதனை நிறைவர்க்கமாகத் தருக.

9. $Q$ இலிருந்து $P$ யின் திசைகோள் $220^o$ எனின், $P$ யிலிருந்து $Q$ இன் திசைகோளைக் காண்க.




10. யாதாயினும் ஒரு நேர் கோட்டின் பொது டிவம் $\frac{y}{3}=\frac{x}{2}+1$ எனின், இதனை $y=mx+c$ எனும் வடிவில் தருக.

**சென்ற வார விடைகள்**

1. $\frac{1}{3}$ 2. $x=3$ 3. $1101_2$ 4. $130^o$ 5. $9\sqrt{2}+3\sqrt{3}$

6. 4 7. $45Km$ 8. 3 9. $294cm^2$ 10. $v=\frac{u-f}{fu}$

11. $x=2$ , ஆள்கூறு (2,4) 12. $\frac{1}{x-y}$ 13. $x=2$

14. 30 நிமிடம் .15. $a=100^\circ$ (மையக் கோணப் பரிதிகோணத்தின் இரு மடங்கு) $b=50^\circ$ (ஒரே துண்டக் கோணம்)

17. 114 18. $3x^2(x^2+2x+3)(x+1)$ 19. 16383 20. ரூபா 11664

## வரலாறு :

2013ல் க.பொ.த(சா.த) பரீட்சையை எதிர்கொள்ளவுள்ள மாணவர்களுக்கு உதவியளிக்கக் கூடிய வகையிலான வரலாற்றுப் பாட செயற்பாடு 01 வினாக்களுக்கான புள்ளி விபரம் தரப்படுகின்றது:

பரீட்சையானது வரலாறு பாடத்தில் வரலாறு I வாரலாறு II என பிரிக்கப்பட்டு நடாத்தப்படும்.

இதில்

**வரலாறு I** 40 வினாக்களைக் கொண்டிருக்கும் இதில் ஒவ்வொரு வினாவுக்கும் 2புள்ளிகள் வீதம் வழங்கப்பட்டு மொத்தம் 80 புள்ளிகள் அளிக்கப்படும். ($40 \times 2 = 80$ புள்ளிகள்)

வரலாறு IIல்

பகுதி I கட்டாயமாக செய்யப்பட வேண்டும்

பகுதி II ல் ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்

பகுதி III ல் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

பகுதி I

(அ)வில் புறவுருப்படத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைக் குறித்தல்.

இலங்கைப் படத்தில் 10 இடங்களுக்கு $10\times1=10$ புள்ளிகள்

உலகப்படத்தில் 8 இடங்களுக்கு $8\times1=8$ புள்ளிகள்

(ஆ)வினாக்களுக்கு அடைப்புக்குள் இருந்து விடயங்களைத் தெரிவு செய்தோ அல்லது நேரடியாகவோ விடையளிக்கும் விதமான நான்கு வினாக்கள் தரப்படும். $4\times1=4$ புள்ளிகள்

(இ)இரண்டு படங்கள் தரப்பட்டு அது தொடர்பான வினாக்கள் கேட்கப்படும். 2 படங்கள் $\times 4\times1=8$ புள்ளிகள்

பகுதி II

2 - 6 வரையிலான வினாக்கள் இலங்கை வரலாறு தொடர்பானவை இவற்றில் எவையேனும் 4 வினாக்களுக்கு விடை எழுத வேண்டும். ($4\times18=54$ புள்ளிகள்)

பகுதி

7 - 10 வரையிலான வினாக்களில் இந்திய வரலாறு, ஐரோப்பிய வரலாறு, சீன வரலாறு, ஜப்பானிய வரலாறு என இப்பகுதியில் அடங்கியிருக்கும். இதில் எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ($2\times18=36$ புள்ளிகள்)

ஆகவே வரலாறு வினாப்பத்திர சுருக்க புள்ளிவிபரம்

| | | |
|---|---|---|
| வரலாறு I ற்கு | | $40\times2=80$ புள்ளிகள் |
| வரலாறு II ல் | I | $18\times1=18$ புள்ளிகள் |
| | | $3\times4\times1=12$ புள்ளிகள் |
| | II | $4\times18=54$ புள்ளிகள் |
| | III | $2\times18=36$ புள்ளிகள் |
| மொத்தம் | | 200 புள்ளிகள் (100ற்கு கணிக்கப்படும்) |

ஆசிரியர்: த.அகிலன் Dip.in.Tech(merit)
புனித மரியாள் கல்லூரி
திருகோணமலை

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் - 23

பிரதீபா

1. இவ்வுருவில் எந்த நிறப் பழங்கள் அதிகமாகவுள்ளது? (பழங்களின் உண்மையான நிறத்தைக் கருத்தில் கொள்ளவும்.)




1. மஞ்சள் 2. பச்சை 3. செம்மஞ்சள்

2. இலங்கையில் மிக உயர்ந்த நீர்வீழ்ச்சி எது?
   1. பம்பரகந்த 2. துன்கிந்த 3. தியலுமை

3. இலை மூலம் இனம் பெருகும் தாவரம் எது?
   1. வல்லாரை 2. சதைக்கரைச்சான் 3. முருங்கை

4. உலகின் குறைந்த மக்கள் தொகை கொண்ட நாடு எது?
   1. வத்திக்கான் 2. சீனா 3. இலங்கை

5. பொருத்தமான சொற்கூட்டத்தின் கீழ் கோடிடுக.
   1. மிருதங்கம், மேளம், உடுக்கை, தபேலா
   2. நாதஸ்வரம், புல்லாங்குழல், தாளம், மலோடிக்கா
   3. வயலின், வீணை, கிற்றார், நாதஸ்வரம்

6. தந்தையானவர் எப்போதும் ..... கீழ்வருவனவற்றுள் சரியான கூற்று எது?
   1. ஒரு ஆணாக இருத்தல் 2. உழைப்பவராக இருத்தல்
   3. அன்பானவராக இருத்தல்

7. ஒட்டகம் பல நாட்கள் தண்ணீரின்றி பாலைவனங்களில் பயணிக்கும். தீக்கோழி மிக வேகமாக ஓடக்கூடியது. தூக்கணாங்குருவி மிக அழகான கூட்டைக் கட்டும். இங்கு கூறப்பட்டுள்ள விபரங்களின் படி பிரதானமாகக் கருதப்படுவது எது?
   1. பிராணிகளினால் மனிதனுக்குள்ள பயன்கள் பற்றியதாகும்.
   2. பிராணிகளின் திறமைகள் பற்றியதாகும்.
   3. சூழலின் நிலவுகைக்குப் பிராணிகள் அவசியமாகும்.

8. 

இவ்வுருவில் வட்டமொன்றும், சதுரமொன்றும் காட்டப்பட்டுள்ளது. அதன்படி, சதுரத்தின் சுற்றளவும், ஒரு பக்க நீளமும் முறையே? 1. 10cm, 40cm 2. 40cm, 10cm 3. 40cm, 5cm

9. வானவில் தோன்றுவது
   1. சூரியன் மறையும் திசையில்
   2. சூரியன் குறித்த நேரத்தில் நிற்கும் இடத்திற்கு எதிர்த்திசையில்
   3. சூரியன் குறித்த நேரத்தில் நிற்கும் இடத்திற்கு பக்கத்தில்

10. 63 ☐ 3 ☐ 9 = 12 இல் இடைவெளிகளுக்குள் வரக்கூடிய கணித செய்கை குறியீடுகள் முறையே
    1. வகுத்தல், கழித்தல் 2. வகுத்தல், கூட்டல் 3. பெருக்கல், கழித்தல்

கீழ்வரும் பாடலை வாசித்து 11, 12ம் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

பாம்பு பாம்பு என்றவன்
பதை பதைத்து ஓடினான்
வேம்பின் வேரில் தடக்கியே
விழுந்துருண்டு எழும்பினான்

11. பதைபதைத்து என்பது எவ்வகைச் சொற்றொடர்?
    1. இரட்டைக்கிளவி 2. அடுக்கு மொழி 3. இணைமொழி

12. பாடலில் உள்ள இணைமொழிச் சொற்றொடர் எது?
    1. விழுந்துருண்டு 2. பதைபதைத்து 3. வேம்பின் வேரில்

13. சரியான கூற்றுக்களைத் தெரிக.
    அ. நீரிற்கு மூன்று நிலைகள் உள்ளன.
    ஆ. கஸ்தூரி மஞ்சள் இலங்கைக்கு மட்டும் உரிய தாவரமன்று.
    இ. வாழை செடி வகையைச் சேர்ந்த தாவரமன்று.
    1. மூன்றும் சரியானது 2. அ, ஆ மட்டும் சரியானது
    3. இ மட்டும் சரியானது

14. இயற்கை ஒளிமுதலாகக் கொள்ளப்படுவது எது?
    1. சூரியன் 2. நட்சத்திரம் 3. சந்திரன்

பெயர்: ..........................................................
..........................................................
முகவரி: ..........................................................
..........................................................
..........................................................
பாடசாலை: ..........................................................

## ரிங்கோ ஸ்ரேசனர்ஸ் வழங்கும் பரிசுகளை வெல்லுங்கள்

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

கடந்த வார வினாக்களுக்கான விடைகள்

1. 2 2. 2 3. 2 4. 3 5. 1 6. 1 7. 2 8. 1 9. 2
10. 3 11. 1 12. 2 13. 3 14. 2 15. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அறிஞர்களின் கூற்று

அன்பினால் நல்லவர்களை அடக்க வேண்டும். அச்சத்தினால் தீயவர்களை அடக்க வேண்டும்.

- அரிஸ் டோட்டில் -

மலருக்கு மணமும், மனிதனுக்கு குணமுமே அவசியமானவை.

- ஓயிட் பீல்ட் -

துன்பம் போல் அறிவூட்டும் ஆசான் இல்லை

- டிஸ் ரேலி -

சிந்திக்காமல் படிப்பது வீண். படிக்காமல் சிந்திப்பது ஆபத்தானது.

- கன்பூசியஸ் -

எதிரி என்னை வெல்வான் என்று எண்ணும் போது தான் தோல்வி ஆரம்பமாகும்.

- நெப்போலியன்

வெற்றி தம் எல்லாத் தவறுகளையும் மூடி மறைத்து விடும்.

- பெர்னாட்ஷா

- R.M.றிபான் -

## நோன்பு

நோன்பாளி எச்சிலை விழுங்கலாமா?
நோன்பாளி எச்சிலை விழுங்கினால் நோன்பு முறியும் என்று அல்லாஹ்வோ அவனது தூதரோ கூறியதாக எந்த ஆதாரமும் கிடையாது.

நோன்பாளி பல் துலக்கலாமா?
நபி(ஸல்) அவர்கள் நோன்பாளியாக இருக்கிற போது என்னால் கணக்கிட முடியாத அளவுக்கு அதிகமாக பல் துலக்க நான் கண்டேன். (புஹாரி 3/76)

நோன்பு வைத்துக் கொண்டு நறுமணம் பூசலாமா?
நோன்பாளி நறுமணம் பூசலாம். நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அனஸ்(ரழி) அறிவிக்கிறார்கள் ''நோன்பாளி ஸுர்மா இடுவது தவறில்லை. (புஹாரி) நோன்பாளிகள் குளிக்கும் போது சவர்க்காரம் பாவிக்கக் கூடாது என்று கூறுகிறார்கள். ஆனால் கதீஸ் பாவிக்கலாம் எனக் கூறுகின்றது.

நோன்பாளி வாந்தி எடுத்தால் நோன்பு முறிந்து விடுமா?
தானாகவே ஒருவருக்கு வாந்தி வந்தால் அவர் நோன்பை களாச் செய்ய வேண்டியதில்லை. வேண்டுமென்றே யார் வாந்தி எடுக்கிறாரோ அவர் நோன்பை களாச் செய்ய வேண்டும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (திர்மதி - 220, அபூதாவுத் 2380)

## பெண்மணிக்கான இஸ்லாமிய குடும்ப வாழ்க்கை

றிபீகா ரவூப்

மனிதன் தனித்து வாழ இயலாதவன். பிறந்தது முதல் தாயின் அரவணைப்பும், தந்தையின் பராமரிப்பும் ஒவ்வொரு குழந்தைக்கும் தேவைப்படுகின்றன. குடும்பத்தில் கணவன், மனைவி, பிள்ளைகள் என்போர் முக்கிய உறுப்பினர்களாக அமைவர். உலக வாழ்க்கை இயக்கம் பெறுவதற்காக அல்லாஹ் அனைத்தையும் சோடி சோடியாகப் படைத்திருக்கின்றான். அது போல் மனிதனையும் ஆண், பெண் என்ற சோடியாகவே படைத்திருக்கின்றான். ஆதம் ஹவ்வா ஆகிய முதல் மனித சோடியிலிருந்தே அல்லாஹ் பூமியில் மனித இனத்தை விருத்தி செய்தான். உலகில் ஆண்களுக்கு பெண்களும், பெண்களுக்கு ஆண்களும் துணையாக இருப்பது தான் இறை ஏற்பாடாகும்.

மனைவி, பிள்ளைகள் பாதுகாப்பைக் கணவன் பொறுப்பேற்றுள்ளான். அவர்களுக்கு உணவு, உடை, வீடு வசதிகளை செய்து கொடுப்பது இஸ்லாமிய கடமைகளையும் நடைமுறைகளையும் பின்பற்றி வாழப் பழக்குவது அவர்களின் கல்வி, சுகவாழ்வு போன்றவற்றிற்கான வழி வகைகளை ஏற்படுத்திக் கொடுப்பது. அவர்களை அன்புடன் வழிநடத்துவது போன்ற தேவைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக உழைப்பது செலவிடுவது போன்ற கடமைகளை அவன் செய்ய வேண்டும்.

திருமணத்தின் போது வறிய நிலையில் உள்ளவர்களை அல்லாஹ் வசதியுள்ளவராக மாற்றி விடுகிறான் என்று அல்குர் குறிப்பிடுகின்றது. அல்லாஹ்வின் பாதையில் நீங்கள் செலவழிக்கும் ஒரு தீனார் அடிமையை விடுதலை செய்வதற்காக நீங்கள் செலவிடும் தீனார், மனைவி மக்களுக்குச் செலவு செய்கின்ற ஒரு தீனார் ஆகியவற்றில் உங்கள் மனைவி மக்களுக்குச் செலவு செய்கின்ற தீனாரே நன்மைக்குரியது என நபி(ஸல்) அவர்கள் நவின்றார்கள்.

இவ்வாறான கடமைகளும் பொறுப்புகளும் கணவனுக்கே பிரதானமாக அமைகின்றன. இதனால் தான் இல்லற வாழ்வில் இணைந்த பின் ஓர் ஆண் சில நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாகின்றான். எப்படியாவது உழைத்து தனது குடும்பத்தையும் மனைவி மக்களையும் காப்பாற்ற முற்படுகிறான். இதன் மூலம் உலக வாழ்வு வளம் பெறுகிறது.

கணவன் திருப்தியடைந்த நிலையில் மரணிக்கும் பெண் தான் விரும்பிய வாயிலால் சுவர்க்கம் நுழைவாள் என மனைவிக்குப் போதனை செய்த நபி(ஸல்) அவர்கள் உங்களில் சிறந்தவர் உங்கள் உங்கள் மனைவிக்கு நல்லவரே என கணவனுக்கு அறிவுரை புகர்ந்தார்கள்.

மனைவி மக்களைப் பராமரிக்க வேண்டியவன் கணவனே. குழந்தைப் பராமரிப்பு, வீடு நிர்வாகம் போன்றவற்றை மனைவி ஏற்றுக் கொள்கிறாள். ஆண் வெளியே சென்று பொருளீட்டும் போது பெண் வீட்டிற்குள் இருந்து குடும்பம் என்ற நிறுவனத்தைக் கட்டியெழுப்புகிறாள். கணவனோடு சேர்ந்து குழந்தைகளின் சுக துக்கங்கள், தேவைகள் முதலியவற்றை அவள் பொறுப்புடன் கவனிக்கிறாள்.

உங்கள் குழந்தைகளை நீங்கள் மதித்து நடவுங்கள் அவர்களுக்கு அழகிய ஒழுக்கங்களையும் நற்பண்புகளையும் கற்றுக் கொடுங்கள். ஏனெனில் உங்கள் குழந்தைகள் அல்லாஹ் உங்களுக்களித்த அருட்கொடையாகும் என நபி(ஸல்) அவர்கள் நவின்றார்கள். (இப்னுமாஜா) ஒரு மனிதன் மரணித்து விட்டால் அவனுடைய நற்காரியங்கள் அனைத்தும் நின்று விடுகின்றன. ஆனால் நிலையான தருமம், பயனுள்ள கல்வி, பெற்றோருக்காகப் பிரார்த்திக்கும் குழந்தைகள் ஆகிய மூன்றும் தொடர்ந்து நன்மையை ஈட்டுக் கொடுக்கின்றன என நபி(ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். குழந்தையைப் பெற்று மகிழ்வடைவதோடு மாத்திரம் நின்று விடாமல் அவர்களைச் சீராக வளர்க்கவும் வேண்டும் என்பதை இந்த ஹதீஸ் எடுத்துக் காட்டுகின்றது. ஆதலால் பெற்றோர் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய பொறுப்புக்கள் அதிகமாக உள்ளன.

நல்லதொரு பெயர் வைப்பது, நற்கல்வி புகட்டுவது, நல்லொழுக்கம் கற்பித்துக் கொடுப்பது போன்ற செயற்பாடுகள் நல்ல முஸ்லிமையும் நல்ல இஸ்லாமிய சமுதாயத்தையும் உருவாக்க வழிவகுக்கின்றன.

## எண் இரு கண்கள்

**நான்** ஒரு நத்வா மாணவன். எனது பெயர் இப்னு ஒசித். நான் நடுத்தர குடும்பத்தில் பிறந்தவன். ஆயினும் மார்க்கத்தின் ஆழமறிந்து கல்லூரியில் இணைந்தவனல்ல.

மார்க்கத்தின் ஆழமறிய முயற்சிக்கும் மாணாக்களின் பண்பறிந்து கல்லூரியில் இணைந்தவன்.

எனக்கு பெரிய முத்துக்கள் போன்ற அல்லது அதைவிடவும் விலை மதிப்பிட முடியாத இரண்டு கண்கள் உண்டு. அவ்விரண்டும் ஒன்றையொன்று அளவு கடந்து நேசிக்கின்றன. அவற்றில் ஒன்று நோயினால் பீடிக்கப்பட்டால் மற்றையது துடித்துப்போய் விடுகின்றது. அதே போன்றே எனக்கோ அல்லது எனது சகோதரர்களுக்கோ ஏதேனும் ஏற்பட்டு விடக் கூடாதென எனதிறைவனை தினந்தோறும் பிரார்த்திக்கின்றன. கண்களென்றால் அவைகள் தான் உண்மைக் கண்கள். ஒரு சிப்பியில் மறைந்த இரு முத்துக்கள்.

அவ்விரண்டும் எனது கல்விப் பாதைக்கு மட்டுமன்றி எனது மறுமைப் பாதைக்கும் வழிகாட்டி என்னை நெறிப்படுத்த முயற்சிக்கின்றன. ஒளி விலக்கேந்திய மனிதன் இரவில் பயணிக்கும் போது பாதையிலுள்ள பள்ளத்தில் விழாமல் எப்படி காக்கப்படுகின்றானோ அதே போன்றே என்னிரு கண்களும் என்னை இரவில் பள்ளத்தில் வீழ்வதிலிருந்தும் பகலில் பாவத்தில் வீழ்வதிலிருந்தும் தடுக்கின்றன. எனவே அவ்விரண்டையும் ஓர் ஒளி தாங்கிய இரு கம்பங்கள் என்று சொன்னாலும் என் மனம் நிறைவடையப் போவதில்லை.

எனது இலட்சியப் பாதையை நான் வகுத்துக் கொள்வதற்கு முன்னரே அவ்விரண்டும் வகுத்து விட்டன. வகுத்ததது மட்டுமன்றி என் நலன் கருதி அப்பாதையிலுள்ள கற்கள் முற்களை அகற்றி தூய்மைப்படுத்தி ஒவ்வொரு பாதையினூடாக நான் பயணிப்பதைப் பார்த்து வண்ண மலர்கள் தூவி மனம்' மகிழ்ச்சி கொள்ளுகின்றன.



என்னிரு கண்களும் எனதிறைவன் எனக்களித்த இரு மாபெரும் அன்புக் கடல்களாகும். அவ்விரண்டும் தனக்கு விரும்பிய விடயத்தை பார்ப்பதில் அக்கறையற்று நான் விரும்பும் விடயங்களையே அதிகமாகப் பார்க்கின்றன. இறைவனருளால் கிடைத்த என்னிரு கண்களும் இல்லையெனின் பாரிய இடி மின்னல் மழையுடன் கூடிய புயலில் அகப்பட்ட மான்கூட்டம் ஒன்றையொன்று விட்டெரிந்து திசைமாறி அலைமோதுவது போன்று நானும் எனது சகோதரர்கள், குடும்பத்தவர்கள், உறவினர்களையெல்லாம் விட்டுப்பிரிந்து திசைமாறி அறியாமையில் அலைமோதி இருப்பேன். இதையென்னும் போது என் மனம் உருகுகின்றது. என் கண்களை மரணம் வரை இரு கரங்களில் ஏந்திக் காத்தாலும் அதுவும் அதற்கு ஈடாகாது.

இறுதியில் மறுமை வரை என் கண்கள் மங்காமல் மலர்ந்திட வேண்டும். சுவர்க்கத்தின் சுவண்டிகளுக்குள் சுடரொளியாய் ஒளித்திட வேண்டுமென்பதே எனதிறைவனிடம் நான் வேண்டும் மனுவாகும்.

என் உள்ளத்தில் ஊற்றெடுத்த உண்மை அன்பை உம்மத்தை காத்திடும் கருவியான பேனாவில் மையாக இட்டு இதுவரை நான் எழுதிய என்னிரு கண்கள் எனது தாயும் தந்தையுமாகும்.

**R.M.கஸ்ஜின்**
தரம் - 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## the SUNDAY TIMES

### இந்தியப் பயணம் தொடர்பாக வாய் திறக்காத பசில்

இந்தியப் பயணத்தின் போது அவ்வரசு 13வது திருத்தச் சட்ட அமுலாக்கம் தொடர்பாக அழுத்தங்களைப் பிரயோகித்ததா என்ற கேள்விக்கு பதிலளிக்க மறுத்துவிட்டார் பசில் ராஜபக்ஷ.

சில விடயங்களை இரகசியமாகப் பேண வேண்டிய தேவை இருப்பதாக தெரிவித்த அவர் ஒரு கணவனுக்கும் மனைவிக்குமிடையிலான விடயங்கள் சிலவற்றை வெளிப்படுத்த முடியாது என்பது போன்ற விடயமே அது என்று தெரிவித்தார்.

13வது திருத்தச் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டுவரும் முயற்சியை இடை நடுவில் கைவிட்டதன் காரணம் பற்றிக் கேட்டபோது இவ்வகையான மாற்றங்களைக் கொண்டுவரும் திருத்தங்களை அவ்வளவு இலகுவாக முன்னெடுக்க முடியாது என்றும் அம்மாற்றங்கள் தொடர்பான முடிவுகளையும் மக்களுக்குத் தெரிவிக்கும் கடப்பாடு நமக்குள்ளதென்றும் தெரிவித்த அவர் திருத்தமூலம் தற்காலிகமாக பின்தள்ளப்பட்டுள்ளதே தவிர கைவிடப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

இதனை முன்நிலைப் படுத்துவதற்கு பாராளுமன்ற தெரிவுக் குழு ஒரு சிறந்த அமைப்பு என்றும் பொதுமக்களிடையே பரவலாக இவ்விடயம் பேசப்பட்ட பின்னரே பொது நிலைப்பாடொன்றை எட்டமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

### கிராமிய வீதிகளைத் திருத்துவதற்கு சீனாவிடமிருந்து மேலுமொரு பெருங்கடன்

52 பில்லியன் ரூபா பெறுமதியான கடனொன்றை சீனாவிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ள இலங்கை அரசு அதைக் கொண்டு இரண்டாந்தர வீதிகளையும், கிராமிய வீதிகளையும் அபிவிருத்தி செய்வதற்கு முடிவெடுத்துள்ளது. இந்நிதியை சீனாவின் அபிவிருத்தி வங்கி வழங்கவுள்ளது. இலங்கை நிதியமைச்சானது அந்நிதியை எந்தெந்த தெருக்களின் அபிவிருத்திக்கு பயன்படுத்த வேண்டும் என்ற முடிவை மேற்கொண்டுள்ளது. சீனா இவ்வருட காலப்பகுதியில் 2.2 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் மேலான தொகையைக் கடனாக வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

### வட மாகாண சபைத் தேர்தல் – 7000 இடம்பெயர்ந்தவர்களை பதிந்துள்ளது.

இன்னும் சொற்ப நாட்களுக்குள் நடைபெறவுள்ள வட மாகாண சபைத் தேர்தலுக்கு வாக்களிக்கும் உரிமை பெறுவதற்கு 7000 இடம்பெயர்ந்த வாக்காளர்களே தற்போது வரை பதிந்துள்ளமை தெரியவந்துள்ளது. இன்னும் சுமார் 11000 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட வேண்டுமென அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

### புகையிரதக் கடவை அமைப்பு நடவடிக்கைகள் துரித கதியில்

புகையிரத கடவை கதவுகளை இயக்குவதற்காக 1000 இயக்குனர்களை நியமனம் செய்யும் பணி துரித கதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளால் பெருமளவு விபத்துக்கள் நாட்டில் நடைபெற்றதன் பின் விழித்துள்ள அரசு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. போக்குவரத்து காவல் துறையினரால் தேர்வு செய்யப்படவுள்ள இவர்கள் கிராம மட்டத்தில் அவ்வக்கிராமங்களில் விழிப்புணர்வுக் குழுவில் பங்குபற்றியவர்களாக இருப்பர். காவல்துறையினரால் ஆரம்பகட்ட ஆய்விற்கு உட்படுத்தப்படும் இவர்கள் நேர்முகப் பரீட்சையின் பின் தேர்வு செய்யப்படுவர். அதற்கான நிதி சனாதிபதியால் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது.

### 38 அரச பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு – தேவா கூறுகிறார்

13வது திருத்தச் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டுவர அரசின் முயற்சியினை அவ்வரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் உட்பட பல பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா தெரிவித்துள்ளார். அவ்வகையான 38 பேரிடம் நான் கையொப்பங்களைப் பெற்றுள்ளதாகவும் அவர்கள் அனைவரும் 13வது திருத்தச் சட்டம் அவ்வாறே இருக்கவேண்டுமென விரும்புவதாகவும் தெரிவித்துள்ளனர் என்றும் அமைச்சர் மேலும் விளம்பினார். அரசு 13வது திருத்தத்தைத் திருத்தும் முயற்சிக்கான ஆதரவை பாராளுமன்றம் பெற்றுக்கொள்ளாது என்று தெரிவித்த அவர் 13வது திருத்தத்தை திருத்தாமல் அதனை முழுவதுமாக அமுல்படுத்துவதே தமது விருப்பமென மேலும் தெரிவித்தார்.

## SUNDAY OBSERVER

Sri Lanka's English Newspaper with the largest circulation

### தேர்தல் திகதி விரைவில் வெளிவரும்

எதிர்வரும் வாரத்தில் வட மாகாண சபை உட்பட ஏனைய இரு மாகாண சபைகளுக்குமான தேர்தல் திகதிகள் வெளிவரும் என தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இவ்வறிவித்தல் வெளியாகி 14 நாட்களின் பின் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும் காலப்பகுதியும் ஆரம்பமாகிவிடும் எனவும் தெரிவித்துள்ளார். ஏனைய இரு மாகாணங்களாக மத்திய மற்றும் வட மத்திய மாகாண சபைகள் ஏற்கனவே கலைக்கப்பட்டுள்ள நிலையில் இவற்றிற்கான தேர்தல் திகதிகள் யாவும் ஒரே திகதியிலேயே அமையும் எனவும் தெரியவருகின்றது.

### அழகு சாதனப் பொருட்கள் உற்பத்தியாளர்களுக்கு ஆப்பு

தற்போது வரை தமது அழகுசாதன பொருட்களுக்கு விளம்பர அனுமதியினை பெற்றுக்கொள்ளாத முன்நிலையிலுள்ள 48 அழகு சாதனப் பொருள் உற்பத்தியாளர்களுக்கு எதிராக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை வழக்குத் தாக்கல் செய்யவுள்ளது. சந்தையில் அப்பொருள் விளம்பரத்துக்கு வந்த பின்னரே அவை தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொண்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையானது இந்நடவடிக்கையினை மேற்கொள்ளவுள்ளது. அழகு சாதனப் பொருட்களை விளம்பரம் செய்வதற்கு விசேட அனுமதியினை நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையிடம் முன்னரே பெற்றுக்கொள் வேண்டும் என்பது சட்டக்கடப்பாடாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அதனை மீறியுள்ள 48 முன்னணி நிறுவனங்களுக்கெதிராகவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என அவ்வதிகார சபையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### வடக்குப் பிரச்சனையைத் தீர்ப்பதில் த.தே.கூ இற்கு நாட்டமில்லை – எஸ்.பி.திஸாநாயக்க

வடக்கு மக்களின் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு த.தே.கூ இதய சுத்தியுடன் செயற்பட மறுக்கின்றது என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார். அரசியற் கட்சிகள் இவ்விடயம் தொடர்பாக தமக்கென தனியான நிலைப்பாட்டினைக் கொண்டிருக்கின்றன. பொது நிலைப்பாடொன்றை நோக்கி நகர்வதற்காக பாராளுமன்ற தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்க வேண்டும். ஆனால் அப்பாராளுமன்ற தெரிவுக் குழுவில் அங்கம் வகிப்பதில்லை என த.தே.கூ, ஐ.தே.க, ஜே.வி.பி ஆகியன எடுத்த முடிவினூடாக வடக்கு மக்களின் பிரச்சனை தொடர்பான அக்கட்சிகளின் சுயரூபம் தெரியவந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

### 2020இல் இலங்கை சர்வதேச கல்விக்கான கேந்திர நிலையமாக மாறும

தேசிய உயர் கல்விக்கான தந்திரோபாய திட்டத்தை 2012 தொடக்கம் 2015ம் ஆண்டு வரைக்குமான காலப்பகுதிக்கு உயர்கல்வி அமைச்சு தயாரித்துள்ளது. இத்திட்டத்தின் படி 2020ம் ஆண்டில் சர்வதேச உயர்கல்விக்கான கேந்திர நிலையமாக இலங்கையை உயர்த்தும் முனைப்பு காணப்படுகிறது. சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளை ஒத்த கல்விக் கேந்திர நிலையமாகவே இலங்கை உருவாக்கப்படவுள்ளது. இதன் ஒரு பாகமாகவே சர்வதேச நாடுகளைச் சேர்ந்த நாடுகளுக்கு இலங்கைப் பல்கலைக்கழக அனுமதியை உயர்கல்வி அமைச்சு திறந்து விட்டிருந்ததாகவும் சர்வதேச பல்கலைக்கழகங்களின் பிரிவுகளை இலங்கையில் திறக்க அனுமதியளித்துள்ளதாகவும் உயர்கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## செய்திக் குறிப்புகள்

**பொதுநலவாயமாநாடு இலங்கையில் நடக்காது விட்டால் நன்று**

மாவை சேனாதிராசா இவ்வாறு தெரிவித்துள்ளார். இம்மாநாடு தொடாபாக பல நாடுகளில் பல அதிருப்திகள் காணப்படுகின்றன. பொதுநரவாய அங்கத்துவம் பெற்ற நாடான இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறலகள் தொடர்பில் கவனம் செலுத்தினால் அதனடிப்படையில் இம் மாநாட்டை வேறு எங்காவது நடாத்துவது நலம் என அவர் தெரிவித்துள்ளார்.

**தீர்வை முன்வைத்தால் தான் யுத்தத்திற்கு உதவி செய்வோம் - அமைச்சர் திஸ்ஸ விதாரண**

யுத்தகாலத்தில் அரசால் நியமிக்கப்பட்ட சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழுவால் முன்மொழியப்பட்ட தீர்வுகளை முன்வைத்தால் மட்டுமே யுத்தத்திற்கு உதவி செயவதாக இந்தியா உள்ளிட்ட நாடுகள் பல கோரியியருந்தள என சனாதிபதி தன்னிடம் தெரிவத்ததாக சிரேட்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

**அரசு தப்பிக்கொள்ள மீண்டும் முன்னெடுப்பது இனவாதத்தையே – நா.உ விஜித ஹேரத்**

தற்போது நாடளாவிய அடிப்படையில் எழுந்துள்ள எதிர்ப்பலைகளைச் சமாளிக்கவே இனவாத செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என நா.உ விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

**இனப்பிரச்சனைத் தீர்வுக்கான வெளிநாட்டுப் பிரதி நிதியாக இப்ராஹிம்**

இனப்பிரச்சனைத் தீர்வு விடயத்தில் தீர்வொன்றைக் கட்டியெழுப்புவதற்காக தென்னாபிரிக்க வெளிவிவகாரப் பிரதி அமைச்சர் இப்ராஹிமை நியமிக்கலாமா? என அரசு அலோசித்து வருகின்றது. இனப்பிரச்சனைத் தீர்வுக்கான சர்வதேச முகவராக ஆரம்பத்தில் நியமிக்கப்பட்டிருந்தவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகும். அவ்வாறானதொரு நியமனமாகவே இப்ராஹிமின் நியமனமும் இரக்கலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது.

**தங்கத்தில் விலை வீழ்ச்சி**

சர்வேதசச் சந்தையில் தங்கத்தில் விலை வீழ்ச்சியடைந்ததால் இலங்கைச் சந்தையிலம் அதன் தாக்கம் உணரப்பட்டுள்ளது. இதனால் உள்நாட்டில் தங்க அடைவு பிடிப்பவர்கள் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

**வெளிநாட்டு அமைப்புக்களே உளவுபார்க்க முயற்சிக்கின்றன – கோட்டபாய**

கையடக்கத் தொலைபேசிகளை செவிமடுக்கும் இயலுமையை சில வெளிநாட்டுத் தூதரகங்கள் கொண்டுள்ளன எனத் தெரிவித்த கோட்டபாய தனது கையடக்க தெலைபேசியைப் பாவிக்கும் போது அலைவரிசையின் செறிவு மாத்திரிமின்றி அழைப்புக்களின் நிலைமையும் குறைவடைவதாக தெரிவித்துள்ளார்.

**600 இலங்கையர் நிர்கதி**

சவூதியில் வேலை தேடிச் சென்ற நிலையில் இன்னல் பலவற்றுக்குள்ளான சுமார் 600 பேர் நிர்க்கதியாக தமாமிலுள்ள இலங்கையின் குடிவரவு குடியகல்வு அலுவலகத்திற்கு அருகிலிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு மாதங்களின் பின் கூடியது கிழக்கின் அமைச்சரவை

கடந்த இரண்டு மாதங்களாகக் கருத்து முரண்பாடுகளால் தளம்பியிருந்த கிழக்கின் மாகாணசபையின் அமைச்சரவைக் கூட்டம் கடந்த 08ம் திகதி நடைபெற்றுள்ளது.

கிழக்கு மாகாண சபையின் அமைச்சர்களால் முன்மொழியப்படும் மக்கள் நலப் பணிகள் கிழக்கின் முதலமைச்சராலும், மாகாண ஆளுனராலும் துடுக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டைக் கூறியே கடந்த இரண்டு மாதங்களாக கிழக்கின் அமைச்சரவையின் நான்கு அமைச்சர்களும் அமைச்சரவை அமர்வுகளை தவிர்த்திருந்தனர்.

அவர்களது கோரிக்கைகளாக மாகாண ஆளுனரையும், முதல்வரையும் மாற்ற வேண்டும் என்றிருந்த வேளை சனாதிபதி திட்டவட்டமாக அவ்விரண்டு கோரிக்கைகளையும் ஏற்க முடியாது எனத் தெரிவித்திருந்ததுடன் சுமுகமான தொழில் உறவினை மாகாணத்தில் மேம்படுத்திக் கொள்ளுமாறும் சம்பந்தப் பட்டவர்களிடம் தெரிவித்திருந்தார்.

இந் நிலையில் அனைத்து அமைச்சர்களும் கலந்து கொண்ட அமைமைச்சரவைக் கூட்டமாக கடந்த 8ம் திகதி நடைபெற்ற கூட்டம் அமைந்தது.

அக் கூட்டத்தில் அமைச்சரவையால் ஏற்கனவே பரிந்துரைக்கப்பட்ட தீர்மானங்கள் யாவற்றையும் சனாதிபதி தமக்களித்துள்ள அதிகாரத்தைக் கொண்டு நிறைவேற்றுவதாக முதலமைச்சர் உறுதியளித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து மறுநாட்காலை முதலமைச்சரின் தலைமையில் அமைச்சுக்களின் செயலாளர்களுடன் நடைபெற்ற கூட்டமொன்றில் அமைச்சரவையின் தீர்மானங்களைத் தங்குதடையின்றி நிறைவேற்ற நடவடிக்கை எடுக்குமாறு கட்டளையிட்டுள்ளார்.

தொடாந்து நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மாகாண அமைச்சர் ஹாபிர் நஸீர் " மாகாண ஆளுனரின் அதிகாரம் தமது மக்கள் நடவடிக்கைகளுக்குத் தடையாக இருப்பதாகத்" தெரிவித்தார். மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் "கிழக்கு மாகாண சபையினால் மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கி அபிவிருத்தி அடைந்த மாகாணமாக மாற்றவதற்கு ஜனாதிபதி மற்றம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சா? ஆகியோர் பூரண ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றனர்.

இந்த நிலையில் ஒரு சிலஅதிகாரிகள் தடையாக இருக்கின்றனர். குறிப்பாக மாகாண ஆளுநரின் அதிகாரம் எமக்கு தடையாகவுள்ளது. இந்த மாகாண சபை இல்லாத கால கட்டத்தில் எவ்வாறு ஆளுநர் நிர்வகித்தாரோ அதைப்போல இன்றும் முற்படுவது தவறு என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்" என்றார்.

"நாம் அனைவரும் ஒற்றுமையுடனும் மக்கள் பணியில் ஆர்வத்துடனுமே இருக்கின்றோம்" என கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

# 13ல் இந்தியா உறுதி

13ம் திருத்தச் சட்டம் தொடர்பிலும், அதற்கு அப்பால் செல்வதிலும் இந்திய அரசாங்கம் உறுதிப்பாட்டுடன் இருப்பதாக தெரிவித்துள்ள இந்திய துணை தூதுவர் மகாலிங்கம், எந்தவொரு பிரச்சினைக்கும் நிச்சயமாக ஒரு தீர்வு உள்ளது. அதில் தமிழர்கள் உறுதியாக இருக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் இனவிவகாரங்களுக்கான செயலாளர் கலாநிதி சிதம்பரம் மோகன் எழுதிய, 13வது அரசியல் யாப்பு சம்பந்தமான யதார்த்தமும் சில உண்மைகளும். எனும் கையேடு வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், 13ம் திருத்தம் தொடர்பில் சமீப காலத்தில் இரு முக்கிய சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. ஒன்று இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்தியா சென்று திரும்பியிருக்கிறார். அதேபோன்று எமது தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் இலங்கை வந்து திரும்பியிருக்கிறார்.

இவற்றையடுத்து இந்தியா என்ன கூறியது? என்ன கூறவில்லை? அதேபோன்று இலங்கை என்ன சொன்னது? என்ன சொல்லவில்லை? என ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

எனவே அவை குறித்து நான் விவாதிக்க விரும்பவில்லை. ஆனால் இந்திய அரசாங்கம் கண்டிப்பாக 13ம் திருத்தம் தொடர்பில் உறுதியாக உள்ளது என்ற தெரிவத்தார் அவர்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாணசபைத் தலைமை வேட்பாளர் யார்?



வடமாகாண சபையின் முதன்மை வேட்பாளராக சிரேட்ட தலைவர்களில் ஒருவரான மாவை சேனாதிராசா அவர்களையா அல்லது முன்நாள் மேல் நீதிமன்ற நீதியரசர் உயர்திரு சி.வி.விக்னேஸ்வரனையா நிறுத்துவது என்ற கலந்துரையாடல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈடுபட்டு வருகின்றது.

தலைவர் சம்பந்தனுக்கு இரண்டாமவரை நிறுத்த விரும்பமுள்ளதாகவும் ஏனைய கட்சித் தலைவர்களுக்கு முதலாமவரை நிறுத்த விருப்பமிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.



# 13 தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழு அறிக்கையை 6 மாதங்களுக்குப் பின்தள்ளியது அரசு

13வது திருத்தம் தொடாபுாக ஆராயவென அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையை சமர்ப்பிப்பதை 6 மாதங்களுக்கு அரசு பின் போட்டுள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கையை இரண்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்பிக்கும் நோக்குடனேயே அரசு நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக முன்னர் அறிவித்திருந்தது.

இம்முடிவை அரசு மேற்கொள்வதற்கு இந்திய அரசின் அழுத்தமே காரணமாக இருக்க வேண்டும். அத்துடன் பொதுநலவாயத் தலைவர்களின் மாநாடு நடைபெறவுள்ள இந் நிலையில் 13வது திருத்தத்தைத் திருததும் முடிவை எடுத்தால் அது நாட்டில் கொந்தளிப்பை ஏற்படுத்தி விடலாம் என்ற எண்ணமும் அரசிற்கிருக்கலாம்.

அண்மையில் இந்தியா சென்றிருந்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சரிடம் இலங்கை தன்னிச்சையாக 13ல் திருத்தங்களை மேற்கொள்ள முடியாது என கடுந்தொனியில் தெரிவித்திருந்ததாக இந்தியச் செய்திகள் தெரிவித்தன.

அவ்வாறே இந்தியத் தூதுவர் சிவ்சங்கர் மேனன் இலங்கை வந்தபோது அக்கூற்றை வெளிப்படையாகத் தெரிவித்திருந்தார்.

இதேவேளை 11ம் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவுகளை அறிவிப்பதற்காக வந்திருந்த அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல அவர்கள் "13வது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலேயே வடமாகாண சபைத் தேர்தல் நடைபெற உள்ளது என்றும் அச் சட்டப்படி அதிகாரங்களை அம்மாகாண சபை பெற்றுக் கொள்ளும்" என்றும் தெரிவித்திருந்தார். அதன்படி அம்மாகாண சபை காணி மற்றும் காவல்துறை அதிகாரங்களையும் பெற்றுக்கொள்ளும் வலுவுள்ளது என்றும் தெரிவித்தார்.

## வட மாகாண சபைக்கு காவல்துறை, காணி அதிகாரங்கள் - கெஹலிய

பாராளுமன்றத் தெரிவுக்குழுவினை எதிர் கட்சிகள் தவிர்த்துள்ள நிலையால் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளில் மாற்றங்கள் எவையும் நிகழாது என்று தெரிவித்த அமைச்சர் இந்தியா தம்ழத் தேசியக் கூட்டமைப்பை பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு வருகை தர அழுத்தங்களைக் கொடுத்துள்ளது என்றார். இதனால் எந்த நேரத்திலும் தெரிவுக்குழுவிற்கு தமிழத் தேசியக் கூட்டமைப்பு சமூகமளிக்கலாம் என்று தாம் எதிர் பார்ப்பதாகவும் தெரிவித்தார்

மலைமுரசு
MALAIMURASU
பத்திரிகைக்கு மாணவப் பத்திரிகையாளர்கள் தேவை
பகுதிநேரமாகவோ அல்லது முழு நேரமாகவோ செய்தியாளர் ஆகலாம்
மூன்று மாதப் பயிற்சியின் பின் கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் தரகினை உழைக்க முடியும்
தொடர்பு - இல 159A,
இரண்டாம் மாடி,
திருகோணமலை
0777 555 738
075 42 52 042

இராம கிருஸ்ண சங்கம் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி
திருகோணமலை
பழைய மாணவர் சங்கம்
கொழும்புக் கிளை அங்குரார்ப்பணக் கூட்டம்
காலம் : 27.07.2013
இடம்: இராம கிருஸ்ண மிசன் மண்டபம், வெள்ளவத்தை, கொழும்பு
கொழும்பு வாழ் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களை இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்
தொடர்புகளுக்கு:
தலைவர் -அதிபர் 071 8422411 - 026 2222426
செயலாளர் 077 6155175
க. உதயகுமார் 077 7703118
ப.கிருசாந்தன் 077 8177146

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org